தமிழரசு
ஏப்ரல் 2005








# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
பங்குனி – சித்திரை
மலர்: 36 இதழ்: 10
ஏப்ரல் 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ ஊனமுற்றோருக்கு புதிய வேலைவாய்ப்புகள் .............. 2
★ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் .............. 5
★ சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு .............. 7
★ உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் .............. 9
★ காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினருக்கு புதிய சலுகைகள் .............. 11
★ முந்திரி விவசாயிகள் பயன்பெற முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் .............. 15
★ சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய புதிய வீடுகள் .............. 17
★ பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மாணவ–மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள் .............. 21
★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ–மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படும் .............. 22
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் "தமிழ்ப் புத்தாண்டு" வாழ்த்துச் செய்தி .............. 25
★ வேளாண் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு .............. 26
★ அறிவுச் சுடரொளி அம்பேத்கர் .............. 29
★ விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் .............. 30
★ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் .............. 31
★ குமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரம் .............. 33
★ தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் .............. 35
★ தமிழக அதிரடிப் படையின் சாதனையால் இந்தியாவின் காவல் துறைக்கு உலக அளவில் கௌரவம் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை 37
★ தமிழ்நாட்டில் நோக்கியா செல்பேசித் தொழிற்சாலை .............. 45
★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் இயந்திரப் படகுகள், மோட்டார் மற்றும் இதரப் பொருள்களுக்கு முழு வரிவிலக்கு .............. 47
★ அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் தமிழகம் முதலிடம் .............. 49
★ வணிக வரி வருவாய் வளர்ச்சி விகிதம் உயர்வு .............. 51
★ கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் தொகுப்பு வீடுகள் செப்பனிடப்படும் .............. 54
★ தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக தீயணைப்பு ஊர்திகள் .............. 56
★ ஊராட்சிகளில் பணிபுரியும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு .............. 57
★ தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா .............. 59
★ திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் பூங்கா .............. 63
★ விவசாயிகளின் பயிர்க்கடன் வட்டி தள்ளுபடி .............. 65
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் 'விஷு திருநாள்' வாழ்த்துச் செய்தி .............. 69
★ ஆண்டிபட்டியில் பல்துறை பணிவிளக்கக் கண்காட்சி .............. 70
★ விருதுநகர் மாவட்டத்தில் காட்டாமணக்குப் பயிர் சாகுபடி .............. 73
★ சென்னையில் மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்க திட்டம் .............. 77
★ கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரையண்ட் பூங்கா .............. 79

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை :** அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் வழங்கும் விழா

**இரண்டாம் பக்க அட்டை :** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தார்கள். (14.4.2005)

**நான்காம் பக்க அட்டை :** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நோக்கியா (Nokia) செல்பேசி நிறுவனத்தினர் சந்திப்பு

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 நிகரி : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 16.3.2005

# ஊனமுற்றோருக்கு புதிய வேலைவாய்ப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊனமுற்றோர்கள் மீது, நான் எப்பொழுதும் மாறாத பரிவும், அவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்ற உளமார்ந்த விருப்பமும் கொண்டுள்ளேன். இதன் அடிப்படையில் தான் எனது முந்தைய ஆட்சிக் காலத்தின் போது அதாவது 1992ஆம் ஆண்டு ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென ஒரு தனித் துறையையே நான் ஏற்படுத்தினேன். அதுமட்டுமன்றி, ஊனம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் – மீறி ஊனம் ஏற்பட்டோருக்கு உரிய நேரத்தில் உதவ வேண்டும் – சமுதாயத்திலும், குடும்பத்திலும் சாதாரண மனிதர்கள் போல அவர்களும் வாழ்க்கை நடத்திட வேண்டும் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, 1994ஆம் ஆண்டில் முதன் முறையாக எனது அரசுதான், ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையை வகுத்தது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக நான் திருத்தி வெளியிட்ட 18 அம்சத் திட்டத்தில் 6–ஆவது அம்சமாக குழந்தைகளுக்கு இளம் பிராயத்தில் ஊனம் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் தொடக்கத்திலேயே ஊனத்தைக் கண்டறிந்து உரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதை சிறப்பு அம்சமாகக் கொண்டு எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு சம வாய்ப்பு அளிக்கவும் அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்துடன் அவர்கள் இணைந்து முழுவதுமாக பங்கு பெறும் வகையிலும் தமிழ்நாடு ஊனமுற்றோர் விதிகள் 2002 எனது அரசால் இயற்றப்பட்டது.

அது மட்டுமன்றி, ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள், ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை, பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள், ஊனமுற்றோருக்கு இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோர்க்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்குச் சலுகைகள், இலவச பேருந்துச் சலுகை என பல்வேறுத் திட்டங்களின் கீழ் ஊனமுற்றோருக்கு உதவிகளையும், சலுகைகளையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு எனது முந்தைய ஆட்சிக் காலத்திலும் சரி 2001–ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற தற்போதைய ஆட்சிக் காலத்திலும் சரி ஊனமுற்றோருக்கான சிறப்பான பல திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவதில் தமிழக அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாறு செயல்படுத்துவதன் பயனாகவே 2004ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நாளன்று மேதகு குடியரசுத் தலைவர் வழங்கிய 58 தேசிய விருதுகளில் 14 விருதுகளைத் தமிழகம் பெற்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தவிர, 2004ஆம்

ஆண்டில், இவ்வாறு, வேறு எந்த மாநிலத்தையும் விட அதிக எண்ணிக்கையில் தேசிய விருதுகளைப் பெற்று அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகித்தது என்பதை நினைவுபடுத்துவதில் மிக்க பெருமிதம் அடைகிறேன்.



இந்நிலையில் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் **7.3.2005** அன்று தங்களது பல்வேறு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் போராட்டம் மேற்கொண்டனர். இவ்வாறு போராட்டம் மேற்கொண்ட பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் என்னை நேரில் சந்தித்து தங்கள் குறைகளை முறையிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததை அறிந்த நான் 9.3.2005 அன்று, சென்னை, தலைமைச் செயலகத்திற்கு அவர்களை வரவழைத்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். இந்தக் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலிப்பதாகவும், இது குறித்த உரிய அறிவிப்புகளை விரைவில் வெளியிடுவதாகவும் அப்போது நான் அவர்களிடம் உறுதி அளித்திருந்தேன்.

இதன்படி, ஊனமுற்றோர் பால் தனி அக்கறை யோடும், மிகுந்த பரிவோடும், அந்தக் கோரிக்கைகளை பரிசீலனை செய்து, பார்வையற்றோர் நலனுக்காகவும் மற்றும் பிற ஊனமுற்றோர் நலனுக்காகவும் கீழ்க்காணும் முடிவுகளை நான் தற்போது அறிவிப்பதில் மன நிறைவு அடைகிறேன்.

1. கடந்த 2001ஆம் ஆண்டு இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற போது இருந்த மிகவும் மோசமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு 2001ஆம் ஆண்டு நவம்பரில் அரசுப் பணியிடங்களை நிரப்புவதற்குப் பொதுவானதொரு தடை விதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நுழைவு நிலைப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்தி 150 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியிடங்களை பார்வையற்றோர் உள்ளிட்ட ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்ப நான் தற்போது முடிவு செய்துள்ளேன். இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், வரவேற்பாளர், தொலைபேசி இயக்குபவர், நூலக உதவியாளர், இசை ஆசிரியர், சுருக்கெழுத்தர், தையல் பயிற்றுநர், தொழில் ஆசிரியர், மின்தூக்கி இயக்குபவர், புத்தகம் கட்டுபவர், பொருத்துநர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் பயனீட்டு கணக்கீட்டாளர் ஆகிய பதவிகள் தொடர்பான இந்த 150 பணியிடங்கள் உடல் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்பப்படும்.

2. அரசுத் துறைகளில் 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளைச் சார்ந்த பணி வகைகளில் ஊனமுற்றோருக்கு மிகவும் ஏற்ற பணியிடங்களைக் கண்டறியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் பார்வையற்றோர், கை, கால் ஊனமுற்றோர், செவித்திறன் குறைந்த மற்றும் வாய் பேச இயலாதவர்களைக் கொண்டு நிரப்பப்படுவதற்கு ஏற்றவை என 117 வகையான பணியிடங்கள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட 117 வகையான பணியிடங்களின் விவரங்களை எனது அரசு வெளியிடும். இந்த 117 வகையான பணியிடங்களுக்குப் புதிதாக நியமனம் செய்யும்போது ஊனமுற்றவர்களுக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

3. தகுதி வாய்ந்த, பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றவர்களிடையே 2:1 என்ற விகிதாச்சாரத்தில் ஐந்தாண்டு ஒப்பந்த அடிப்படையில் அரசு உறுப்பு கல்லூரிகளில் 20 இளநிலை விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக, மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னர், காலச் சம்பள ஏற்ற முறையில் நிரந்தரமாக பணியில் அமர்த்தப்படுவார்கள்.

4. ஒரு சிறப்புத் தேர்வின் மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோரிடையே இருந்த 2:1 என்ற விகிதாச்சார முறைப்படி 150 இளநிலை பள்ளி உதவி ஆசிரியர்கள், ஐந்தாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு தொகுப்பு ஊதியமாக மாதம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம்

வழங்கப்படும். ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் காலச் சம்பள ஏற்ற முறையில் அவர்கள் நிரந்தரமாக பணி அமர்த்தப்படுவார்கள். பார்வையற்றோர் பெரிதும் தமிழ் மற்றும் வரலாறு பாடப் பிரிவுகளிலேயே கல்வித் தகுதி பெற்றுள்ளதால் இப்பாடப் பிரிவுகளில் அதிக அளவில் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

5. தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது ஊனமுற்றோருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு உள்ளது. ஊனமுற்றோருக்கு ஆசிரியர் பணியில் உள்ள கூடுதல் வாய்ப்புகளை கருத்தில் கொண்டு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன், ஒவ்வொரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 5 கூடுதல் இடங்கள் வீதம் 7 அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆண்டுக்கு 35 இடங்கள் வீதம் 3 ஆண்டுகளுக்கு கூடுதல் இடங்கள் ஊனமுற்றோருக்கென ஏற்படுத்தப்படும்.

6. வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம், 1981ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டத்தின்படி தற்போது, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஓராண்டிற்கும் மேல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள, பார்வையற்றோருக்கு 10ஆம் வகுப்பு மற்றும் அதற்குக் கீழ் எனில், மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயும், மேல்நிலை வகுப்பு தேர்ச்சி அல்லது பட்டப் படிப்பிற்குக் கீழ் எனில் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயும், பட்டதாரிகள் அல்லது முதுநிலைப் பட்டதாரிகள் எனில் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நிவாரணத் தொகை தற்போது 5 ஆண்டுகளுக்குத் தான் வழங்கப்படுகிறது.

இவ்வாறு, வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகை இனி 50 சதவிகிதம் உயர்த்தப்படும். அதன்படி 10ஆம் வகுப்பும் அதற்கும் கீழும் கல்வித் தகுதி உடையவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதமும்; மேல்நிலை வகுப்பு தேர்ச்சி பெற்ற அல்லது பட்டப் படிப்பிற்குக் கீழ் படித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 375 ரூபாய் வீதமும், பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 450 ரூபாய் வீதமும் வழங்கப்படும். மேலும், இந்தச் சலுகை, 10 ஆண்டுகள் வரை அல்லது அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படும்.

7. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில், அலுவலர்கள் நிலையில் ஊனமுற்றோருக்கென சில பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, தேர்ந்தெடுக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 4 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் பார்வையற்றோர் இருவரும்; கை, கால் ஊனமுற்றோர் இருவரும் நியமனம் செய்யப்படுவர். இந்த அலுவலர்கள், ஊனமுற்றோர், ஊனமுற்றோரின் பெற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கான தனியார் சமூக சேவை நிறுவனங்கள் ஆகியோருக்கு, ஆலோசனைகளும், வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டுதல்களும் வழங்குவார்கள். இப்பதவிகள் ரூ.5000–150–8000 என்ற சம்பள விகிதத்தைக் கொண்ட நுழைவு நிலைப் பதவிகளாக இருக்கும்.

பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நலனைக் கருத்தில் கொண்டு இன்று நான் அறிவித்துள்ள இச்சலுகைகளும் உதவிகளும் ஊனமுற்றோர் புது நம்பிக்கையுடனும், புது தெம்புடனும் தங்களது வாழ்க்கையைத் தொடர வழி வகுக்கும். ஊனமுற்றோர் நலனைக் காக்கும் அரணாக எனது அரசு என்றென்றும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★




சாக்லேட் ஹெர்னன் கார்ட்டஸ் (Hernan Cartes) என்ற ஸ்பெயின் நாட்டு வீரர் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மெச்சிக்கோவை வென்று திரும்பியபோது, அங்கிருந்த ஆஸ்டெக் மக்கள் விரும்பி அருந்தும் 'சாக்கலட்டல்' (Chocolat) என்ற பானத்தின் இரகசியத்தைக் கண்டறிந்து கொண்டுவந்தார். அரைத்த கோக்கோ விதை, நீர், மிளகு ஆகியவற்றிலிருந்து அந்த பானம் தயாரிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டினர் மிளகுக்குப் பதிலாக சர்க்கரையைக் கலந்து குடித்தனர். இப்பானத்தின் இரகசியம், 100 ஆண்டுகள் வரை வெளியே தெரியாமலேயே இருந்தது. 17ஆம் நூற்றாண்டில்தான் இதன் இரகசியம் தெரியவந்தது. பின்னர் பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு இப்பானம் பரவியது. தின்பதற்கான சாக்லேட் 19ஆம் நூற்றாண்டில்தான் விற்க ஆரம்பித்தது. வறுத்த கோக்கோ பருப்புடன், பால்பவுடர், சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்து அரைத்தால் ஒரு கூழ் கிடைக்கிறது. இதை வார்ப்பிலிட்டுக் குளிர வைத்து சாக்லேட் தயாரிக்கப்படுகிறது.




# அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், விழுப்புரம், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கும் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குமாக மொத்தம் 101 புதிய பேருந்துகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து இந்தப் புதிய பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பழுதுபட்ட பேருந்துகளால் பொதுமக்களுக்கு பல இடையூறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், இவற்றை சீர்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பழுதுபட்ட அனைத்துப் பேருந்துகளையும் மாற்றி புதிய பேருந்துகள் வாங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, பழுதுபட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 2,375 என்று கண்டறியப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக, 2003–2004ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு போக்குவரத்து நிதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ஏறத்தாழ 105 கோடி ரூபாய் கடனுதவி பெற்று 1,050 பேருந்துகள் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்திருந்தார்கள். இந்த 1,050 பேருந்துகளில் 860 பேருந்துகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு சாலைகளில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள பேருந்துகளில் தற்போது 101 பேருந்துகளில் முழுமையான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், எஞ்சியுள்ள 89 பேருந்துகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த 101 புதிய பேருந்துகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் கும்பகோணம், சேலம், கோயம் புத்தூர், விழுப்புரம், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், சென்னை மாநகரப் போக்கு வரத்துக் கழகத்திற்கும் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் ஆகிய அரசுப் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கி அவற்றின் இயக்கத்தை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.



மேலும், இதே விழாவில், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் வழங்கப் படுகின்ற 2004–2005ஆம் ஆண்டிற்கான சிறந்த வாடிக்கையாளர்கள் விருதுகளை கும்பகோணம், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிகளுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. வாங்கிய கடனை உரிய நேரத்தில் தானாக முன்வந்து திருப்பிச் செலுத்தும் போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு முதல் இந்நிறுவனத்தின் சார்பில் சிறந்த வாடிக்கையாளர் விருது வழங்கப்படுகின்றது. இவ்வகையில், அதிக லாபம் ஈட்டி, தங்கள் நிதியிலிருந்து தாங்கள் பெற்ற கடன் மற்றும் வட்டித் தொகையை, திருப்பிச் செலுத்தி முதல் இடத்தைப் பெற்றுள்ள கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. வி. திராவிடமணி அவர்களுக்கும், இரண்டாமிடத்தைப் பெற்றுள்ள சேலம் அரசுப் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. ஆர். வெள்ளைப்புதியவன் அவர்களுக்கும், மூன்றாமிடத்தைப் பெற்றுள்ள கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. சி. ரெங்கசாமி அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்விருதுகளை 24.3.2005 அன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில்,மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை செயலாளர் திரு. இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

## செய்தித்தாள்

*அச்சு எந்திரம் 16ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே உலகில் செய்தித்தாள்கள் தோன்றின. இந்தியாவில் 1780–ல் முதலாவது செய்தித்தாளை வில்லியம் போல்ட் என்பவர் கல்கத்தாவில் தொடங்கினார்.*

*அதற்கடுத்ததாக இந்தியாவில் செய்தித்தாள் தோன்றியது தமிழ்நாட்டில்தான். சென்னையில் 1785–இல் வார இதழ் ஒன்றை ரிச்சர்டு ஜான்ஸ்டன் என்பவர் தொடங்கினார். 1857–ல் முதலாவது இந்தியக் கிளர்ச்சி ஏற்பட்ட பின்னர் நாடெங்கும் அரசியல், சமூகத் துறைகளில் புதிய எழுச்சியை செய்தித்தாள்கள் தோற்றுவித்தன. செய்தித்தாள்கள் பல மொழிகளில் வெளிவரலாயின. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் செய்தித்தாள்கள் பல மொழிகளில் வெளிவரலாயின.*

* * *

# சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை

– 17.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 2004ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பல்வேறு சலுகைகளை நான் அறிவித்தேன். அப்போது ஒய்வூதியமில்லா பணிகளைச் சேர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆயாக்கள், சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு அறிவிப்புகள் தனியே வெளியிடப்படும் என்று நான் அறிவித்திருந்தேன். அதன் அடிப்படையில், 2005–2006ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

1. தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு மாதம் ஒன்றுக்கு, 450 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை – I மற்றும் மதிய உணவுத் திட்ட சமையல்காரர்கள் ஆகியோரின் அடிப்படைத் தொகுப்பு மதிப்பூதியம் மேலும் 330 ரூபாய் உயர்த்தப்படும். இதன் மூலம், இப்பணியாளர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 1,100 ரூபாய் என்ற அளவிற்கு உயரும்.

2. தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு, மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை – II மற்றும் சத்துணவுக் கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு கூடுதல் மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு 290 ரூபாய் வழங்கப்படும். இதனால், இவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 850 ரூபாய் என்ற அளவிற்கு உயரும்.

ஆண்டு ஒன்றுக்கு 47.97 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்த மாற்றங்கள் 1.4.2005 முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப் பட்டது.

3. மேலும், வரையறுக்கப்படாத ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஒய்வு பெறும் பொழுது அரசு 50,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும், தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் ஓய்வு பெறும் பொழுது அரசு 20,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்தப் புதிய ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டம், 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

4. 1.4.2005 முதல் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்திற்கான அரசின் பங்களிப்பு அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போன்று 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் 2005–2006ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது.

அனைத்து சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் ஆகியோர் இந்த அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். தங்களது எதிர்பார்ப்பையும் விட மிகத் தாராளமாக சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமைக்கும், தங்களது நீண்ட காலக் கோரிக்கையான ஒட்டுமொத்தத் தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கும் தங்களது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

தற்போது, தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் அமைப்புகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களும், அடித்தட்டுப் பணியாளர்களே; எனவே, அவர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளன. ரூபாய் 600–10–700–20–1100 என்ற ஊதிய விகிதத்தில் இப்பணியாளர்களில் பெரும்பாலோர் தற்போது அடிப்படைச் சம்பளமாக 940 ரூபாயும், அதற்கு உரிய அகவிலைப்படியாக 573 ரூபாயும், ஆக மொத்தம் 1,513 ரூபாய் ஊதியமாகப் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாட்டில்,தற்போது சத்துணவு அமைப்பாளர்கள் 40,209 பேரும், அங்கன்வாடிப் பணியாளர்கள் 44,264 பேரும், ஆக மொத்தம் 84,473 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, ஒட்டுமொத்த மதிப்பூதியம் 1,063 ரூபாய் ஆக இருக்க வேண்டும் என்று மைய அரசு நிர்ணயித்துள்ளது. இதர மாநிலங்களிலும், இதனை ஒட்டித்தான் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளாவில் 1,063 ரூபாயும்; ஆந்திரப் பிரதேசத்தில் 1,200 ரூபாயும்; கர்நாடகாவில் 1,450 ரூபாயும், மாத மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில்தான் தற்போது அதிகபட்சமாக, மாதம் ஒன்றுக்கு 1,513 ரூபாய் ஊதியமாக வழங்கப்படுகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்கு மிக அதிகமான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் தங்கள் பணியில் மேலும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க நான் தற்போது முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்குத் தனி ஊதியமாக – Personal Pay – 200 ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். தவிர, இந்தத் தனி ஊதியத்திற்கும் தற்போது வழங்கப்படும் அளவான 61 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கவும் ஆணையிட்டுள்ளேன். இவ்வகையில், சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு மொத்தம் 322 ரூபாய் ஊதிய உயர்வு பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, இந்தத் தனி ஊதிய வகையிலான உயர்வைச் சேர்த்து இவர்கள் பெறும் மாத ஊதியம் 1,513 ரூபாயிலிருந்து 1,835 ரூபாயாக உயரும். 84,473 சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் இதனால் பயன் பெறுவர். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 32.64 கோடி ரூபாய் செலவு ஆகும். இந்தத் தனி ஊதியம், 1.4.2005 முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணிபுரிவோர் மேலும் சிறப்புடன் பணி புரிய இந்தச் சலுகைகள், ஊக்கமும் உற்சாகமும், ஊட்டுவதாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

# உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 597.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்த உள்ள "தமிழ்நாடு சுகாதாரத் திட்ட"த்தை (Tamil Nadu Health Systems Project) தொடங்கி வைத்தார்கள். அப்போது இத்திட்டத்திற்கென வடிவமைக்கப் பட்டுள்ள புதிய இணைய தளத்தினைத் தொடங்கி வைத்ததுடன் இந்தத் திட்டத்திற்கான விளக்கக் கையேட்டினையும் வெளியிட்டார்கள். இந்த இணைய தளத்தின் முகவரி www.tnhsp.org ஆகும்.

மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள், மாவட்ட, வட்ட அளவிலான மருத்துவமனைகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை உயர்த்திடவும், இருதய நோய், சர்க்கரை நோய், புற்று நோய் போன்ற நோய்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தவும், நோய்த் தடுப்பு முறைகளை விரிவுபடுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு, உலக வங்கி உதவியுடன் 'தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்' (Tamil Nadu Health Systems Project) என்ற புதிய திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. மொத்தம் ரூபாய் 597.15 கோடி மதிப்பிலான இந்தப் புதிய சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கி ரூபாய் 502.94 கோடியும், தமிழக அரசு ரூபாய் 94.21 கோடியும் வழங்கும். இத்திட்டம் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப் படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 21.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி அறுவைச் சிகிச்சை அரங்கம், பிரசவப் பகுதி, உள் நோயாளிகள், வெளி நோயாளிகள் பகுதி, அவசரச் சிகிச்சைப் பகுதி ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டப்படும். நவீன மருத்துவக் கருவிகள், ரத்தச் சுத்திகரிப்புக் கருவி, வெண்டிலேட்டர்கள், அவசரச் சிகிச்சைப் பகுதி உபகரணங்கள், எக்ஸ்ரே கருவிகள், அல்ட்ராசோனாகிராம் போன்ற கருவிகள் வழங்கப்படும். மேலும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை தேவைப்படுவோரையும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வகையில் 385 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கும், நோயாளர் ஊர்திகள் வழங்கப்படும். அனைத்து பின்தங்கிய மாவட்டங்களிலும், மற்ற மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளிலும், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளிலும் உள்ள ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கருவுற்ற தாய்மார்கள் 30 நிமிட நேரத்தில் சென்றடைந்து சிகிச்சை பெறும் வகையில், 24 மணி நேர மகப்பேறு






மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கருவுற்ற தாய்மார் இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதம் குறையும்.

மேலும், இந்த நிகழ்வின் போது Tata Consultancy Services நிறுவனத்தால் இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்டுள்ள புதிய இணைய தளத்தினையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அப்போது, இந்தத் திட்டத்திற்கான கையேட்டினையும் வெளியிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் திருமதி. சுப்ரியா சாகு, இ.ஆ.ப., புதுடெல்லியில் உள்ள உலக வங்கியின் ஆலோசகர் திரு. ரஜித் பென்மேசூத் (Mr. Rachid Benmessoud, Operations Advisor, World Bank, New Delhi) மற்றும் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கான உலக வங்கியின் திட்டப் பணிக் குழுத் தலைவர் டாக்டர் பிரீத்தி குடீசியா (Dr. Preeti Kudesia, Task Team Leader, Tamil Nadu Health Systems Project, World Bank, New Delhi), ஆகியோர் உடன் இருந்தனர். ✶



## சித்தார்

**வீ**ணையைப் போன்று தோற்றமளிக்கும் சித்தார் என்னும் இசைக்கருவி இந்துஸ்தானி இசையை சிறப்பாக இசைப்பதற்கு ஏற்ற கருவியாகும். குடம் என்ற இதன் பகுதி மரம் அல்லது சுரைக் காயினால் செய்யப்படுகிறது. வீணைக்கும் சித்தாருக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. வீணையில் மெட்டுகள் மெழுகின் மேல் நிலையாகப் பதிக்கப்பட்டிருக்கும். சித்தாரில் மெட்டுகளை நகர்த்திக் கொள்ளலாம். மெட்டுகள் சற்று வளைவாகவும் இருக்கும். சித்தாரில் ஏழு உலோகத் தந்திகள் உள்ளன. வலக்கை விரல்களால் மீட்டி, இடக்கை ஆள்காட்டி விரலையும் நடு விரலையும் தந்தியில் வைத்து இதனை வாசிக்கிறார்கள்.

## சாம்பிராணி

**ஜா**வா, சுமத்ரா முதலிய தீவுகளில் வளரும் ஸ்டைராக்ஸ் பென்சாயின் (Styrax Benzoin) என்ற மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் தான் சாம்பிராணி ஆகும். இம்மரத்தின் பட்டையை துளைத்தால் வெண்மையான பால் போன்ற திரவம் வெளிவந்து இறுகிப் பிசினாகிறது. இப்பிசின் மணம் நிறைந்தது. இது பூசைப் பொருட்களாகவும், வீட்டை மணம் கமழச் செய்யும் பொருளாகவும் தொன்று தொட்டுப் பயன்பட்டு வருகிறது. சாம்பிராணிப் புகை சுவாச நோய்க்கும், சரும நோய்களுக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதிலிருக்கும் முக்கிய கரிமப்பொருள் பென்சோயிக் அமிலம் (Benzoic Acid) ஆகும்

# காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையினருக்கு புதிய சலுகைகள்



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து 15.3.2005 அன்று, இந்த அவையில் நான் பேசும் போது, நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது காவல் துறை என்பதைத் தெளிவுபட தெரிவித்தேன்.

வலிமையான நாடாக இந்தியா இருக்க வேண்டும்; அதில் வளம் மிக்க மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்ற இலட்சியம் ஈடேற வேண்டும் என்றால் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலைதான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும், அதனைக் கட்டிக் காப்பதிலும் காவல் துறையின் பணி இன்றியமையாதது. இதன் அடிப்படையில்தான், காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும், காவலர்கள் நலன் பேணவும், பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் ஆகியவற்றை நான் அறிவித்தேன்.


**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 23.3.2005**

தமிழக மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை உறுதி செய்திட தமிழகக் காவல் துறை 24 மணி நேரமும் ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. காவலர்களுக்கு வாரத்தில் 6 நாட்கள் பணி நாட்கள் என்றும்; ஒரு நாள், வார விடுமுறை நாள் என்றும் உள்ள போதும்; சட்டம்–ஒழுங்கு பிரச்சினை, வழக்குகள் புலன் விசாரணை, வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு சென்று வருதல் முதலான பல்வேறு பணிகள் காரணமாக சில நேரங்களில் வார விடுமுறையை காவலர்கள் துய்க்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறு, வார விடுமுறை நாட்களிலும் தவிர்க்க இயலாத காரணங்களால் பணி மேற்கொள்ளும் காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு விடுமுறை அன்று பணி செய்தமைக்கு ஈடாக வார விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 50 ரூபாயாக இருந்த இந்த வார விடுப்பு ஈட்டுப் படியை நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தி 2002ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன். அதன்படி, தற்போது இவர்கள் வார விடுப்பு ஈட்டுப் படியாக 100 ரூபாய் பெற்று வருகின்றனர்.

அவசரப் பணிகள் நிமித்தமாக வார விடுமுறை துய்க்காமல் பணியில் ஈடுபடுகின்ற காவலர்களுக்கு, நிறைவான விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட வேண்டும். எனவே, தற்போது வழங்கப்படுகின்ற வார விடுப்பு ஈட்டுப் படியை உயர்த்தி வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 100 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி வழங்க, நான் ஆணையிட்டுள்ளேன்.

அதே போல, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலைய அலுவலர் நிலைக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக, தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் வார விடுப்பு ஈட்டுப் படி நாள் ஒன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 22.06 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

காவல் துறையில் பணி புரியும் காவலர் நிலை முதல், தலைமைக் காவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு மாதந்தோறும் 40 ரூபாயும்; உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோருக்கு 50 ரூபாயும்; துணை காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் இந்தியக் காவல் பணி – ஐபிஎஸ் – அல்லாத காவல் கண்காணிப்பாளருக்கு 60 ரூபாயும் சீருடைப் படியாக தற்போது வழங்கப்படுகிறது. தற்போது உள்ள சலவைக் கட்டணங்களைக் கருத்தில் கொண்டு, இச்சீருடைப் படியை உயர்த்த நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, காவல் துறையில் பணியாற்றும் காவலர் நிலை முதல் இந்தியக் காவல் பணி – ஐ.பி.எஸ். – அல்லாத காவல் கண்காணிப்பாளர் நிலை வரை அனைவருக்கும் ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும்.

இதே போல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் வரை உள்ள பணியாளர்களுக்கு அவரவர் நிலைக்கு ஏற்ப மாதந்தோறும் 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை சீருடைப் படி வழங்கப்பட்டு வருகிறது. தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் நிலை வரை உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும், இனி ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும்.

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் சீருடைப் படி வழங்க அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

தற்போது சென்னை மாநகரம் மற்றும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் படும் காவல் துறை ஆய்வாளர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கும்; தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகளின் பேரில் அப்பணிகளில் ஈடுபடும் போது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர் நிலைக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 15.3.2005 அன்று, உள்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மதிப்பிற்குரிய உறுப்பினர், திரு. ஜி. பழனிச்சாமி அவர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 9 ரூபாய் தான் உணவுப் படியாக வழங்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இது சரி அல்ல.

சென்னை நகரைப் பொறுத்தவரை காவல் துறைப் பணியாளர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

துறைப் பணியாளர்களுக்கும், நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற வீதத்தில், உணவுப் படியை ஆகஸ்டு, 2002 முதல் உயர்த்தி வழங்கி நான் ஆணையிட்டேன். சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கான உணவுப் படி கணக்கிட்டு வழங்கப்படும் முறை, காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வரும் முறையிலிருந்து மாறுபட்டு உள்ளது. தீயணைப்புப் பணிக்குச் செல்லும் தூரம் மற்றும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில், அவர்களுக்கு உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

1992–இல் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அளவான, 9 ரூபாய் உணவுப் படியை ஜனவரி 2002 முதல் நகராட்சி எல்லையில் இருந்து 8 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இடங்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காகச் செல்லும் போது வழங்கப்படும் உணவுப் படியை கால அளவுக்கு ஏற்ப 25 ரூபாய் முதல், அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். அதேபோல், 8 கிலோ மீட்டருக்குள் உள்ள இடங்களுக்கு கால அளவுக்கு ஏற்ப 15 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 40 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். எனவே, 9 ரூபாய் என்று இருந்த உணவுப்படியை, 2002ஆம் ஆண்டே நான் உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே பணிக்குச் செல்லும் தூரத்தையும், கால அளவையும் கணக்கில் கொள்ளாமல் உணவுப் படி வழங்க, நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், காவல் துறையிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலும், சென்னை அல்லாத இடங்களில் தற்போது உணவுப் படி பெற்று வரும் பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே அளவாக 55 ரூபாய் உணவுப் படி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.


இவ்வாறு உயர்த்தப்பட்ட வார விடுப்பு ஈட்டுப்படி, சீருடைப் படி, மற்றும் உணவுப் படி ஆகியவற்றால் 87,047 காவல் துறைப் பணியாளர்களும், 6,281 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களும் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு மொத்தம், ஆண்டு ஒன்றுக்கு, 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மேலும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்ற வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ★

## தெரிந்தும் தெரியாதது

- ஆக்டோபஸிக்கு மூன்று இதயங்கள் உள்ளன.
- மனித மூளையின் எடை 1.424 கிராம், அது பழுப்பு நிறத்தில் இருக்கும்.
- மின்மினிப் பூச்சி மின்னுவதற்குக் காரணம், அதன் தோலின் கீழ் உள்ள லுயூசிபெரின் என்னும் வேதிப் பொருளாகும்.
- வெற்றிலையில், கால்சியம் 280 மி.கி., பாஸ்பரஸ் 40 மி.கி., இரும்புச்சத்து 7 மி.கி., கரோட்டின் 5760 மி.கி., வைட்டமின் பி. 0.8 மி.கி., வைட்டமின் சி 5.0 மி.கி. ஆகியவை உள்ளன.
- உப்பு நகரம் என்று அழைக்கப்படுவது சகாரா பாலைவனத்திலுள்ள டெகாஸ்லா.
- அன்டார்டிகாவில் பாம்புகள் இல்லை.

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த குழுவினர் சந்திப்பு



கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த 13 பேர்கள் கொண்ட குழுவினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரு வார கால சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை நேரில் பார்வையிட்டனர். இதனையடுத்து 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்துப் பேசினர். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்ற தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம் முதலான பல்வேறுத் திட்டங்கள் குறித்து தங்களது வெகுவான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டனர். மேலும், பல்வேறு மாவட்டங்களுக்கும் ' சென்று இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை நேரில் பார்வையிட்டதாகவும், இத்திட்டப் பயன்களை தமிழக மக்கள் பெற்றிருப்பதை நேரில் கண்ணுற்றதாகவும் அவர்கள் தெரிவித்துக் கொண்டனர். கென்யா நாட்டிலும் இதேபோன்ற தேவைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அக்குழுவினர், இதுபோன்ற திட்டங்களை தங்கள் நாட்டிலும் செயல்படுத்த இருப்பதாகத் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இக்குழுவினருக்கு தமது வாழ்த்துகளையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

## துளிகள்...

- முதன் முதலில் ஆங்கில அகராதியைத் தயாரித்தவர் (Naowesbster) நோஹ்வெப்ஸ்டர் என்ற அமெரிக்கர் ஆவார்.
- பேச்சு வழக்கில் சொல்லப்படும் ஒரு காத தூரம் என்பது பத்து மைல்களாகும்.
- ஒட்டும் அஞ்சல் தலைகள் முதன் முதலில் 1840ஆம் ஆண்டில் அறிமுகமாயின.

# முந்திரி விவசாயிகள் பயன்பெற முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முன்னிலையில், 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உள்ள முந்திரி விவசாயிகள் பயன்பெறும் வகையில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் அமைத்திட தமிழ்நாடு அரசுக்கும், மைய அரசின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு குழுமத்திற்கும், (Agricultural and Processed Food Products Export Development Authority - APEDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசின் சார்பாக வேளாண்மைத்துறை செயலாளர் திரு. பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அவர்களும், APEDA நிறுவனத்தின் சார்பாக அதன் துணைப் பொதுமேலாளர் திரு.ஹர்பல்சிங் (Mr.Harpal Singh, Deputy General Manager, APEDA) அவர்களும் கையெழுத்திட்டனர்.

முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் முந்திரி பயிரிடும் மாநிலங்களில் தமிழ்நாடு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 95,500 எக்டேர் நிலப்பரப்பில் முந்திரி பயிரிடப்பட்டு சுமார் 40 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,200 மெட்ரிக் டன் முந்திரி, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா மற்றுமுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் முந்திரி பயிரிடும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், முந்திரி உற்பத்தியைப் பெருக்கி பதனிடும் தொழிற்சாலைகளின் திறனளவை முழுமையாகப் பயன்படுத்திடவும், வேலைவாய்ப்புகளைப் பெரிய அளவில் உருவாக்கிடவும், முந்திரி பதனிடும் தொழிற்சாலைகளையும் ஏற்றுமதிக்கான வசதிகளையும், தமிழ்நாட்டில் சிறப்பாகப் பெருக்கிடும் வகையில், கடலூரில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார்துறை பங்கேற்புடன், வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இதன் அடிப்படையில், 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முன்னிலையில், கடலூரில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் அமைத்திட, தமிழ்நாடு அரசுக்கும், மைய அரசின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு குழுமத்திற்கும் (Agricultural and Processed Food Products Export Development Authority - APEDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மைய அரசின் அபீடா நிறுவனம், உணவு பதனிடும் அமைச்சகம் மற்றும் தேசியத் தோட்டக் கலை வாரியம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு அரசு இந்த முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலத்தை தனியார் பங்களிப்போடு கடலூரில் அமைக்கின்றது.

இந்த ஏற்றுமதி மண்டலத்தில் நல்ல முறையில் முந்திரியை விளைவிப்பதற்கான விரிவாக்கப் பணிகள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் ஆகியவை அறிமுகப்படுத்தப்படும். இது தவிர, தனியார் துறை மூலமாக பழக்கூழ் நிலையம், முந்திரி பதப்படுத்தும் நிலையம், முந்திரிக் கொட்டை பிரிப்பு நிலையம், குளிர்பதன கிட்டங்கி, சிப்பம் கட்டும் அறை, ஆய்வக வசதிகள் ஆகிய நவீன உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், இந்த ஏற்றுமதி மண்டலத்தில், ஏற்றுமதி குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி மற்றும் பன்னாட்டு விற்பனை பற்றிய பயிற்சி போன்றவைகள் மேற்கொள்ளப்படும்.

கடலூரில் அமைக்கப்பட உள்ள முந்திரிக்கான இந்த ஏற்றுமதி மண்டலத்தின் மூலம் முந்திரி ஏற்றுமதி இன்னும் மூன்று ஆண்டுகளில் ரூபாய் 100 கோடியாக உயர்வதுடன், புதிதாக 20 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் நபர்கள் வரை வேலைவாய்ப்பைப் பெற்றிட ஏதுவாகும்.

இந்த நிகழ்வில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார்நாகேந்திரன், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் திரு. ஆர்.முருகையா பாண்டியன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., தொழில்துறை செயலாளர் திரு. ரமேஷ்ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., மற்றும் வேளாண் விற்பனைக் குழு ஆணையர் திரு.கே. கணேசன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் பங்கேற்றனர்.

❖ ❖ ❖



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 115ஆவது பிறந்த நாளையொட்டி 29–4–2005 அன்று சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

26.12.2004 அன்று, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை சுனாமிப் பேரலைகள் பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் மாநிலத்தின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர். எதிர்பாராத இந்த இயற்கை இன்னலின் விளைவாக, 8,000–க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வீடுகளையும் வாழ்நாள் முழுவதும் தாங்கள் சேமித்த



ஆகியவற்றை வாங்குவதற்குத் தேவையான மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு தொழில் செய்வோர், நிலங்கள் பாதிக்கப்பட்டோர், ஆதரவற்றோர், விதவைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் போன்ற ஒவ்வொரு பிரிவினருக்கும் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுனாமியால் பாதிப்பு அடைந்த குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், எனது அரசு எடுத்து வருகிறது. இதுவரை தமிழக அரசு சுனாமி நிவாரணப் பணிகளுக்காக, 902 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய புதிய வீடுகள்


**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 24.3.2005**

பொருட்களையும் இழந்து பெரும் துன்பத்துக்கு உள்ளாயின.

சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தால் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் அத்தொழிலைச் சார்ந்துள்ள ஏறத்தாழ மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்கின்ற காரணத்தால், அக்குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்திடத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏப்ரல் 2005 முடிய வழங்கிடவும் நான் ஆணையிட்டேன். பாதிப்படைந்த மீனவர்கள் வலை, கட்டுமரம், படகுகள், விசைப் படகுகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் வகையில், வீடு இழந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றத்தைத் தாங்கக் கூடிய தரமான நிரந்தர வீடுகள் கட்டித் தரப்பட வேண்டியது அடுத்த கட்டப் பணி ஆகும்.

இவ்வாறு நிரந்தர வீடுகள் கட்டித் தரும் பணியில் தன்னார்வ அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச மறுவாழ்வு அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்று தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று நிரந்தர வீடுகள் கட்டித் தர பல நிறுவனங்கள் முன் வந்துள்ளன. சுனாமியால்



பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த அமைப்புகள் மூலம் கட்டித்தரப்பட உள்ள வீடுகளையும் தமிழக அரசால் கட்டப்பட உள்ள வீடுகளையும், ஒழுங்கு அமைப்புடனும் விதிமுறைகளுக்கு உட்பட்டும் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே இதற்கு ஏதுவாக சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானக் கொள்கை ஒன்றை வகுத்தளிக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

கடற்கரையை ஒட்டி உள்ள பகுதிகளில் வீடுகள் கட்டப்படும் போது, மைய அரசால் 1991–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கடற்கரையோர கட்டுப்பாட்டு விதிகளை, அதாவது, Coastal Regulation Zone Notifications-ஐ பின்பற்றித் தான் வீடுகள் கட்டப்பட வேண்டும். தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை மாவட்டங்கள் பெரும்பாலும் CRZ-2 மற்றும் CRZ-3 ஆகிய வகைப்பாடுகளின் கீழ் வருவன ஆகும்.

நகரங்களைச் சார்ந்த பெருமளவில் கட்டுமான வளர்ச்சி அடைந்த பகுதிகள் CRZ-2-ன் கீழ் வரும். ஏனைய கிராமப் பகுதிகள் CRZ-3-ன் கீழ் வருகின்றன. இவ்விரண்டு பகுதிகளிலும் ஏற்கெனவே அதாவது, 1991ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்து இருந்தால் அவற்றைப் புதுப்பித்துக் கட்டலாம். புதிய கட்டடங்கள் எழுப்புவதற்கு கூடுதலாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை, கட்டடத்தின் உயரம், காலியாக இருக்க வேண்டிய பகுதி போன்றவை குறித்து சில விதிமுறைகள் உள்ளன. பொதுவாக கடல் உயர்மட்ட அளவிலிருந்து, அதாவது, – High Tide Line- லிருந்து 200 மீட்டர் வரை உள்ள பகுதி எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படக் கூடாத No Development Zone ஆகும்.

கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள மக்கள் தங்கள் படகுகள் மற்றும் வலைகளை வைத்துக் கொள்வதற்கும் தங்களது மீன்பிடித் தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கும் ஏதுவாக கடலுக்கு அருகில் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். அதே நேரம் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டு அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதும் அவசியம் ஆகும்.

எனவே, இதற்கு ஏற்ற வகையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 1,30,000 குடும்பங்களுக்கு அவரவர் விரும்புகின்ற இடங்களில் புதிய தரமான இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகத் தேவைப்படும் நிலத்தை அரசே இலவசமாக வழங்கும். ஒவ்வொரு வீடும் 1,50,000 ரூபாய் செலவில் 300 முதல் 325 சதுர அடி கட்டடப் பரப்பளவு கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு குடியிருப்பு வளாகமும் முறையாகத் திட்டமிடப்பட்டு குடிநீர், சாலை வசதி, தெரு விளக்குகள், மழைநீர் சேகரிப்பு, வடிகால்கள், சமுதாயக் கூடம், சத்துணவுக் கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கும். சென்னை மற்றும்

திருவள்ளூர் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாகத் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட குடியிருப்புகள் கட்டித் தரப்படும். ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 235 முதல் 250 சதுர அடி பரப்பு அளவு கொண்டதாக இருக்கும். இந்தப் புதிய வீடுகள் கட்டும் மாபெரும் திட்டத்திற்கு ஏறத்தாழ 1,950 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்திற்கு மைய அரசும், உலக வங்கியும் பெருமளவு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகுதி பாதிப்படைந்த காரை வீடுகளைப் பழுது பார்க்க சேத மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிதி உதவி அளிக்கப்படும்:–

20,000 ரூபாய் வரை சேத மதிப்பீடு இருந்தால், முழு மானியமாக 20,000 ரூபாய் வரை வழங்கப்படும். சேத மதிப்பீடு 20,001 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரை இருந்தால் குறைந்தபட்சத் தொகையான 20,000 ரூபாய் மற்றும் 20,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு 75 சதவிகிதம் நிதி உதவி வழங்கப்படும். 50,000 ரூபாய்க்கும் அதிகமாகச் சேத மதிப்பீடு இருப்பின் குறைந்தபட்சத் தொகையாக 42,500 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய்க்கும் அதிகமானச் சேத மதிப்பீட்டில் 50 சதவிகிதம் நிதி உதவி வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு வீட்டிற்கு 75,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

இம்மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும் போது கீழ்க்கண்ட பொது விதிமுறைகளைக் கடைப்பிடிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது:

**கடல் உயர்மட்ட அளவு - High Tide Line– இல் இருந்து 200 மீட்டர் தொலைவுக்குள் உள்ள பகுதி**

கடற்கரையோர கட்டுப்பாடு விதிமுறைகளின் படி, 200 மீட்டருக்குள் இருந்த சேதமடைந்த வீடுகள் 1991ஆம் ஆண்டுக்கு முன்பே உரிய அங்கீகாரத்துடன் கட்டப்பட்டு இருந்தால் மட்டுமே மீண்டும் பழுது பார்க்க இயலும். எனவே, முற்றிலும் அல்லது பெரும்பகுதி பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை மற்றும் காரை வீடுகளின் உரிமையாளர்கள் விரும்பினால், 200 மீட்டருக்கு அப்பால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய புதிய வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். அவ்வாறு அவர்கள் விரும்பாமல் சேதமடைந்த தங்கள் பழைய வீடுகளையே புதுப்பித்துக் கொள்ள விரும்பினால், அவர்கள் தாங்களே பழுது பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். 200 மீட்டருக்குள் உள்ள பாதிப்பு அடையாத காரை வீடுகளில் உள்ள குடும்பங்களும் பாதுகாப்பு கருதி அரசு தரும் மாற்று இடத்தில் வீடு பெற விரும்பினால், அவர்களுக்கு அரசு சார்பிலோ, தொண்டு நிறுவனங்கள் சார்பிலோ புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

**200 மீட்டரிலிருந்து 500 மீட்டருக்குள் இருக்கும் பகுதி**

1. இப்பகுதியில் முழுவதுமோ அன்றி பகுதியாகவோ, பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழுவதும் பாதிப்பு அடைந்துள்ள காரை வீடுகள் புதியதாகக் கட்டப்படும். 500 மீட்டருக்கு அப்பால் வசிக்க விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு, புதிய வீடுகள்



500 மீட்டருக்கு அப்பால் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்ல விரும்பாதவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களிலேயே வீடுகள் கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்பு அடைந்த காரை வீடுகளில் உள்ளவர்களுக்கு, 500 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை எனில், அவர்களது வீடுகளைப் பழுது பார்க்க ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு நிதி உதவி அளிக்கப்படும்.

**500 மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி**

1. முழுவதும் அல்லது பகுதி பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழுப் பாதிப்பு அடைந்த காரை வீடுகள் ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய வீடுகள் அந்தந்த இடங்களிலேயே கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்பு அடைந்துள்ள காரை வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு அரசு நிதி உதவி வழங்கும்.

**பொது விதிமுறைகள்**

1. புதிய வீடுகள் கட்ட அரசு இலவசமாக நிலம் வழங்கும். இவ்வாறு வழங்கப்படும் நிலத்தின் பரப்பு கிராமப் பகுதிகளில் 3 சென்ட் ஆகவும், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் ஆகவும் இருக்கும்.

2. புதிய வீடுகள் கட்டித் தர முன்வரும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அப்பணியை மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். இந்நிறுவனங்கள் புதிய வீடுகள் கட்டித் தருவதற்கும் சேதம் அடைந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும் தங்களது நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

3. வீடுகளின் உரிமையாளர்கள் தாங்களே வீடு கட்டிக்கொள்ள விரும்பினால் அதற்கு அனுமதிக்கப் படுவார்கள். அரசு நிர்ணயிக்கும் உச்ச வரம்புத் தொகைக்கு உட்பட்டு கட்டடப் பணிகளின் முன்னேற்றத்திற்கேற்ப நிதி உதவி அளிக்கப்படும்.

4. தொண்டு நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவியுடன் வீட்டு உரிமையாளர்கள் ஆகியோரால் வீடுகள் கட்ட முடியாத நிலையில் அரசே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும்.

5. புதிய வீடுகள் வழங்கப்படும் அனைத்து இனங்களிலும் பழைய இடம் மற்றும் வீடு அரசுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

6. புதிய வீடுகள் கட்டித் தருவதால் காலி செய்யப்படும் இடங்கள் தடை ஆணைப் புத்தகத்தில் பதியப்பட்டு பொதுப் பயன்களுக்காக ஒதுக்கி வைக்கப்படும். மேற்கண்ட இடங்களில் படகுகள் வலைகள் போன்றவற்றை வைக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

7. வல்லுநர்களின் உதவியோடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி வரைபடம் மற்றும் விவரக் குறிப்பீடுகளின் அடிப்படையில் அதாவது Designs and Specifications அடிப்படையில் வீடுகள் கட்டப்பட வேண்டும்.

8. புதிதாகக் கட்டப்படும் அனைத்து வீடுகளும் 10 ஆண்டுகளுக்கு காப்பீடு செய்யப்படும்.

9. புதிய வீடுகளின் உரிமை மனைவி மற்றும் கணவர் பெயரில் கூட்டாக வழங்கப்படும். இருவரில் யாரேனும் ஒருவர் உயிருடன் இல்லாமல் இருந்தால், உயிருடன் இருப்பவர் பெயரோடு முதல் குழந்தையின் பெயரையும் இணைத்து வீடுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட வீடுகளை 10 ஆண்டுகளுக்கு விற்பனை அல்லது அடமானம் செய்வது தடை செய்யப்படும். மனைவி தன் பெயரில் உள்ள சொத்து உரிமையை கணவருக்கு எந்த வகையில் எழுதித் தந்தாலும் சட்டப்படி அது செல்லுபடி ஆகாது.

மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி, அனைத்து மாவட்டங்களிலும் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளவும், அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பம் மற்றும் நிலத்தின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப சிறு மாற்றங்களைச் செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். அவ்வாறு மாற்றங்களைச் செய்யும் போது சம்பந்தப்பட்ட குடியிருப்புப் பகுதி முழுமைக்கும் ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்றவும்; அரசால் நியமிக்கப்பட்டுள்ள கிராம அளவிலான குழுக்களை கலந்து ஆலோசிக்கவும்; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானம் தொடர்பாக எனது அரசால் வகுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை கடலோரப் பகுதிகளில் நேர்த்தியோடும், பாதுகாப்போடும் நிரந்தர வீடுகள் அமைவதை உறுதி செய்திட வழி வகுக்கும். இந்தக் கொள்கை சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள கடலோரப் பகுதி மக்களாலும், அனைத்து அமைப்புகளாலும் பெரிதும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். இந்தக் கொள்கையின் அடிப்படையில் கட்டப்படும் வீடுகள் மக்களுக்குப் பாதுகாப்பான நிரந்தர மறுவாழ்வை அளிக்கும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ✶

# பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மாணவ – மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மாணவ, மாணவிகள் தங்கிப் பயிலுவதற்கு ஏதுவாக 27 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்ட 90 விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்து, 100 புதிய விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் 972 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 770 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் போதிய வசதிகளின்றி இயங்கி வந்தன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்த கொள்கை முடிவின்படி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் போதிய கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, குளியலறை வசதி, எரிவாயு இணைப்பு, மின்விசிறி ஆகிய வசதிகளுடன் சொந்தக் கட்டடங்களில் அமைந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். அதன்படி 28.35 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 90 விடுதிக் கட்டடங்களை 24.3.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன்மூலம் 4,500 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004–2005ஆம் ஆண்டில் 100 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட 31.50 கோடி ரூபாய் அனுமதியளித்து உத்தரவிட்டார்கள். இதன்படி, 5,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக் கற்களை நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஏ. நாகராஜன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ - மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படும்




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 24.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தை தலைசிறந்த மாநிலமாக, முன்னணி மாநிலமாகத் திகழச் செய்வதில் அம்மாநிலத்தில் உள்ள மனித வள ஆற்றல் மாபெரும் பங்கு வகிக்கிறது. இத்தகைய மனித வள ஆற்றலை மேம்படுத்துவதில் கல்வியின் பங்கு மிக மிக இன்றியமையாதது ஆகும். எனவேதான் எனது அரசு கல்வித் துறையின் பால் தனி அக்கறையும் அதீத கவனமும் கொண்டு அத்துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த ஆண்டின் வரவு – செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்விக்கு மட்டும் 4,348.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதே இதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

2001–ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு கடந்த நான்கு ஆண்டுகளில் கல்வித் துறையில் பல்வேறு சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டு அத்திட்டங்கள் யாவும் மிகச் செம்மையுடன் நிறைவேற்றப்பட்டு நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. 2003–2004ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப்பள்ளி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியும் தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. 2001–2002ஆம் ஆண்டில், தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் இடைநிற்றல் வீதம் 16 விழுக்காடாக இருந்தது. பள்ளிக் கல்விக்காக, பல்வேறுத் திட்டங்களை எனது அரசு நிறைவேற்றியதன் காரணமாக 2004–2005 ஆம்



ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்து உள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை யாகும்.

“அனைவருக்கும் கல்வித்” திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதில் ஏனைய மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று மத்திய அரசு பாராட்டி உள்ளது. உலக வங்கி ஐரோப்பியக் கூட்டமைப்பு மற்றும் மைய அரசின் பிரதிநிதிகள் அடங்கிய, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கூட்டு ஆய்வுக்குழு சமீபத்தில் தமிழ்நாட்டில் “அனைவருக்கும் கல்வித்” திட்டம் செயலாக்கப்படுவதைப் பாராட்டியதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

“அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதியை ஏற்படுத்தித் தருவதிலும் அனைத்து வயது குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும் தமிழ்நாடு தொடர்ந்து சீரான முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் திட்டச் செயல்பாடுகளின் வேகம் மற்றும் தரம் நன்றாக உள்ளது. எனவே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோளை இம்மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே அடைந்து விடும்” என்று அந்த ஆய்வுக்குழு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

19.3.2005 அன்று சென்னையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் ஆய்வுக் கூட்டத்தை நடத்திய மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்சிங் அவர்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் தமிழக அரசின் சிறப்பான செயல்பாட்டை வெகுவாகப் பாராட்டி உள்ளார்.

2010ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு பள்ளிக் கல்வியை, அளிப்பது என்பது “அனைவருக்கும் கல்வித்” திட்டத்தின் அகில இந்திய அளவிலான குறிக்கோள் ஆகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசு வகுத்துள்ள இந்த இலக்குக்கு முன்னதாகவே இக்குறிக்கோளை நாம் அடைந்து விடுவோம் என்பது உறுதி. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10–ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ மாணவியர் இடையில் நிறுத்தி விடாமல், தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில், தற்போது அவர்களுக்கு இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தற்போது 5ஆம் வகுப்பு வரை படிக்கின்ற, மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவசமாக பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அதேபோல் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில், 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் 85 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 46.45 கோடி ரூபாய் செலவில் இலவசப் பாடநூல்களை ஆண்டுதோறும் அரசு வழங்கி வருகிறது.

இந்நிலையில், பள்ளிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தொடர்ந்து கல்வி பயில உற்சாகம் அளித்து அவர்களது பெற்றோருடைய கல்விச் செலவின் பளுவைக் குறைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி, இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுவதை மாற்றி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்குவது என்று நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, 1ஆம் வகுப்பில் இருந்து 10ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கும் தேவையான பாடநூல்கள் அனைத்தும் இலவசமாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்

என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் இத்திட்டம் வரும் கல்வி ஆண்டு முதலே அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே செயல் படுத்தப்படும்.

தற்போது விரிவாக்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், 6ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை படிக்கும் 12 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு, 15 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதல் செலவாகும். இதன் மூலம், வரும் கல்வி ஆண்டில் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கை 97 இலட்சமாக உயரும் என்பதையும்; இதற்காக எனது அரசு மொத்தம் 61.45 கோடி ரூபாய் செலவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய், விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவ்வாறான சூழ்நிலைகளில் அத்தகைய குழந்தைகள் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில், அவர்களது கல்விப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இந்தப் புதிய திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும். இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வரும் 1 கோடியே 12 இலட்சம் மாணவ, மாணவியரில் ஒருவர் கூட எந்தக் காரணத்தாலும் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடும் எதிர்பாராமல் அவர்களது குடும்பத்தில் ஏற்படும் இழப்பால் அந்தக் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற மனித நேயத்தோடும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் விழைந்துள்ளேன்.

தமிழகத்தின் மனித வள ஆற்றலை மேம்படுத்தும் வகையில், அனைத்துக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்கப்படுவதை வெற்றிகரமாக நிறைவேற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எனது அரசு உறுதி பூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். □

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
**'தமிழ்ப் புத்தாண்டு'** வாழ்த்துச் செய்தி



**த**மிழ்ப் புத்தாண்டுத் திருநாளில் என் அன்புக்குரிய அனைத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும், என் அகம் கனிந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டு இனிமையும் இன்பமும் தமிழர் இல்லம்தோறும் கொழிக்கின்ற இணையற்ற ஆண்டாய் மலரட்டும்.

புதிய சாதனைகளை நாம் படைக்கின்ற ஆண்டாகவும், புதிய வெற்றிகளை நாம் பெறுகின்ற ஆண்டாகவும், புத்தாண்டு விளங்கட்டும்! வழிமறிக்கும் தடைகளை உடைப்போம்! வளமார்ந்த தமிழகம் படைப்போம்! தழைக்கட்டும் நலங்கள்! கொழிக்கட்டும் வளங்கள்!

தமிழகத் தமிழர்க்கு மட்டுமன்றி தரணிவாழ் தமிழர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என் உளமார்ந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்வதில் உவகை அடைகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—ன் கீழ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை

– 28.3.2005



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,


தமிழகத்தின் வளமைக்கும் கிராமங்களில் வாழும் மக்களின் மேன்மைக்கும் வேளாண் தொழிலே அடிப்படையாக அமைந்துள்ளது. விவசாயம் தழைத்து ஓங்கினால் கிராமங்கள் செழித்து ஓங்கும் – கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அதனால்தான் எனது அரசு வேளாண் தொழிலின் மேம்பாட்டுக்கு பலப் பல உயரிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.



# வேளாண் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

வேளாண்மை வளம் பெற்றிட ஏர் ஓட்டுதல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், அளந்து மூட்டைகள் ஆக்குதல் என ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு மிகவும் இன்றியமையாதது ஆக உள்ளது. வேளாண் சாகுபடி பெருகி கிராம மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் எனில் நிலம் என்னும் நல்லாள் உதவிட வேண்டும் – நீர் என்னும் நல்லாள் ஒத்துழைக்க வேண்டும் – விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரும் தங்கள் நல் உழைப்பை உவப்புடன் வழங்கிட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் முழுத் திறனுடன் தங்களது உழைப்பை நல்கிடும் வகையில் அவர்கள் சிரமம் இன்றி வாழ்க்கை நடத்திட ஏதுவான ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

தமிழகத்தில் ஏறத்தாழ 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்களாகவே உள்ளனர். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது நமது கடமை ஆகும். அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அதிகரிக்கப்பட்டால் தான் அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படும். கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த முடியாத நிலை இருந்தது. இந்த ஆண்டு பருவ மழை நல்ல முறையில் பெய்ததன் காரணமாக விவசாயம் புதிய



வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு தற்போது குறைந்தபட்ச ஊதியம் 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதனை 70 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. வழங்கப்படும் ஊதியம் பணமாக வழங்கப்படாமல் சாகுபடிப் பொருளாக வழங்கப்பட்டால் மொத்த மகசூலில் எட்டில் ஒரு பங்கு ஊதியமாக வழங்கப்பட வேண்டும். பணம் அல்லது பொருள் இவ்விரண்டில் அதிகமானது எதுவோ அது வழங்கப்பட வேண்டும்.

வளம் பெற்றுள்ளது. இந்தச் சூழ்நிலையில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது பொருத்தமாக அமையும் என்பதால் அதனை உயர்த்திட நான் தற்போது முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, விவசாயத் தொழிலாளர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றிடும் வகையில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, முதனிலை அறிவிக்கை – Preliminary Notification ஒன்றை உடனடியாக வெளியிட எனது அரசு முடிவு செய்துள்ளது.

தங்களது சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகளுடன் உழவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உள்ளது. இதை 150 ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. பணி அமர்த்துபவரால் ஏர் மற்றும் உழவு மாடுகள் வழங்கப்படுமாயின் உழவுப் பணிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் ஊதியம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.


கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், நெல்லை அளந்து மூட்டைகள் ஆக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாயாக உள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. அதேபோன்று, இதே

இதேபோன்று, நெல் அல்லாத பிற பயிர்கள் அறுவடை செய்யும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இதே அளவில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

விதைத்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் மற்றும் களை எடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி, ஆண் தொழிலாளர்களுக்கு, நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது.

வரப்புகளையும் வயல்களையும் சீர் அமைத்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய வேலைகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என்று குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி, ஆண் தொழிலாளர்களுக்கு, 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் விவசாயத் தொழிலாளர்களுக்கு பணி அமர்த்துபவரால் உணவு வழங்கப்படுமாயின், அவ்வாறு வழங்கப்படும் அந்த உணவின் பண மதிப்பு ஊதியத்தில் இருந்து கழிக்கப்படக் கூடாது.



வேலை நேரங்களிலும், பணியின் தன்மையிலும் வேறுபாடு இல்லாது தொழில் புரியும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர் இருபாலருக்கும், 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின்படி சம ஊதியம் வழங்கப் பட வேண்டும்.

மேலே தெரிவித்த குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் அரசுப் பண்ணைகளிலும், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பண்ணைகளிலும், பணிபுரியும் தொழிலாளர் களுக்கும் பொருந்துவன ஆகும்.

இவ்வாறு குறைந்தபட்ச ஊதியங்களை உயர்த்து வதற்கான முதனிலை அறிவிக்கை – Preliminary Notification – உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன். குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் இரண்டு மாத காலத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும். அவ்வாறு பெறப்படும் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளை ஆய்வு செய்து இறுதி அறிவிக்கையை இவ்வாண்டு ஜுன் மாதத்தில் எனது அரசு வெளியிடும்.

தொழில்களில் உன்னதத் தொழில் என்று போற்றப்படும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள் சிறந்த வாழ்க்கைத் தரம் பெறுவதை உறுதி செய்யும் வகையில், அவர்கள் மேற்கொள்ளும் வேலைகளுக்கு என நிர்ணயிக்கப் பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்களைக் கணிசமாக உயர்த்தி வழங்கிட எனது அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை, விவசாயத் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அனைவராலும் வெகுவாக வரவேற்கப்படும் என்ற என் நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



சர்.பிட்டி தியாகராயர் அவர்களின் 154ஆவது பிறந்த நாளையொட்டி 27–4–2005 அன்று சென்னை மாநகராட்சி வளாகம் – ரிப்பன் கட்டடத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# அறிவுச் சுடரொளி அம்பேத்கர்



'அண்ணல்' அம்பேத்கர் அவர்கள், 20ஆம் நூற்றாண்டின், இந்திய வரலாற்றைப் பொருத்த வரையில், சட்டத் துறையில், ஒரு சகாப்தம். அரசியல் அரங்கில், ஒரு புரட்சி அத்தியாயம். சமுதாய சீர்திருத்த சிந்தனையில், ஒரு திருப்புமுனை. அவர் நவீன இந்தியாவை உருவாக்கிய, வரலாற்று நாயகர்களின் வரிசையில், முதலிடத்தைப் பெற்றவர். அழியாப் புகழ் பெற்று, நமது நெஞ்சங்களில் எல்லாம், நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டவர், மாமனிதர் டாக்டர் அம்பேத்கர்.

எப்படி, தமிழ்நாட்டில், தந்தை பெரியார் அவர்களின் வடிவில் தோன்றிய, 'பகுத்தறிவுப் பேரொளி', தூங்கிக் கிடந்த முற்போக்குச் சிந்தனைகளைத் தட்டி எழுப்பி, சிந்தனைத் தடத்தை முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட்டதோ அதைப் போலவே, அண்ணல் அம்பேத்கர் என்ற உத்தமரின் வடிவில் தோன்றிய, 'அறிவுச் சுடரொளி', நமது இந்தியத் திருநாட்டையே எழுச்சி கொள்ளச் செய்தது.

'பகுத்தறிவுப் பகலவன்' என்று, பாரெங்கும் போற்றப்பட்ட தந்தை பெரியார், தென்புலத்தில் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளுக்கு, ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த, அதே கால கட்டத்தில் தான், வடபுலத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், தாழ்த்தப்பட்ட இன மக்களின் உயர்வுக்காகவும், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், இந்திய அரசியல் ஏட்டில், ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருந்தார்.

எவ்வாறு ஒரு தனி மனிதர், தன்னுடைய அறிவின் ஆற்றலாலும், பண்பின் தகைமையாலும், சமுதாய இடர்ப்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, தான் மேற்கொண்ட துறையில், சாதனை படைத்து, வரலாற்று நாயகராக, உயர முடியும் என்பதற்கு, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 'வாழ்க்கை வரலாறு', ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றால், அது மிகையாகாது.



ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், பல்முனை மேம்பாட்டிற்கு, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர், அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்ற தலைவர்களுக்கு இல்லாத, ஒரு தனிச் சிறப்பு, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உண்டு. செல்வச் செழிப்பும், செல்வாக்கும், பரம்பரைப் பாரம்பரியமும் உள்ளவர்கள்தான், நாட்டை ஆளவும், சட்டங்களை இயற்றவும் முடியும் என்ற எண்ணத்தை; தனது வாழ்க்கையின் மூலம், தகர்த்தெறிந்து காட்டியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உதித்து; சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து; அரசியல் நிர்ணய சட்டத்தைத் தயாரிக்கும், மகத்தான பணியில் ஈடுபட்டு; சமதர்ம, சமூக நீதித் தத்துவங்களை, வேரூன்றச் செய்ய உதவியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

அண்ணல் அம்பேத்கர், ஒரு தனி மனிதர் அல்ல; ஒரு மாபெரும் இயக்கம்! அவரது இலட்சியங்கள், ஒரு தனி மனிதரின் சிந்தனைகள் அல்ல; ஒரு சமுதாயத்தைப் பண்படுத்தி, வளம் பெறச் செய்யும் ஆயுதங்கள்.

**– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

*(புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி – 3)*

# விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 28.3.2005



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைந்து விசாரித்துத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக நாடெங்கிலும் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று 11ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் 49 விரைவு நீதிமன்றங்கள் நிறுவிட மைய அரசு ஏற்பளித்தது. இதன்படி முதற்கட்டமாக, 30 விரைவு நீதிமன்றங்களை அமைத்திட 3.8.2001 அன்று நான் ஆணையிட்டேன். இந்த நீதிமன்றங்கள் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. 18.12.2001 அன்று அடுத்த கட்டமாக, மேலும் 19 விரைவு நீதிமன்றங்கள் அமைத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த கூடுதல் விரைவு நீதிமன்றங்கள் 2002ஆம் ஆண்டு பிப்ரவரி / மார்ச் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே விரைவு நீதிமன்றங்களை நிறுவுவதில் சாதனை புரிந்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். விரைவு நீதிமன்றங்களை அமைத்து வழக்குகளை விரைந்து விசாரித்து நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 49 விரைவு நீதிமன்றங்கள் மூலம் 31.1.2005 வரை 1,23,503 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விரைவு நீதிமன்றங்கள் அமைத்துச் செயல்படுத்தப் படுவதற்கான முழு செலவினையும் மைய அரசு ஏற்க வேண்டும். இதன்படி இந்த விரைவு நீதிமன்றங்களைச் செயல்படுத்த மத்திய அரசு மொத்தம் 14.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு 31.3.2005 அன்றுடன் முடிவடைகிறது.

1.4.2005 அன்று முதல் விரைவு நீதிமன்றங்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு இதுவரை ஒதுக்கீடு செய்யாததால், தமிழகத்தில் உள்ள இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுமா என்று தெரியாமல் வழக்குத் தொடுத்து உள்ள பொதுமக்கள் குழப்பத்தில் தவிப்பதாகத் தெரிவித்து தேவையற்ற ஒரு கலக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்க சிலர் முனைந்துள்ளனர். இது மிகவும் துரதிருஷ்டவசமானதும் வருந்தத்தக்கதும் ஆகும்.

விரைவு நீதிமன்றங்களில் 26,455 வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே,இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாதது ஆகும். வழக்கு தொடுப்போருக்கு விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி விரைவில் கிடைக்கப் பெறுவதால் விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். 18.9.2004 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் நான் கலந்து கொண்டு விரைவு நீதிமன்றங்கள் 31.3.2005க்கு பிறகும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான நிதியை மைய அரசு ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். மேலும் விரைவு நீதிமன்றங்களை 31.3.2005க்குப் பிறகும் நீட்டிப்பது குறித்த மைய அரசின் நிலைப்பாட்டினை தெரிவிக்குமாறு 18.3.2005 அன்று மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறோம். ஒரு வேளை மைய அரசிடமிருந்து 31.3.2005க்குள் இதற்குச் சாதகமான பதில் வரவில்லை என்றாலும் தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்களும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் ஆணை பிறப்பித்துள்ளேன். அவ்வாறு இந்த நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படத் தேவைப்படும் நிதியான 5 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசே வழங்கிடவும் ஆணை யிட்டுள்ளேன். அதன் அடிப்படையில், தமிழகத்தில் தற்போதுள்ள 49 விரைவு நீதிமன்றங்களும் மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து செயல்பட 24.3.2005ஆம் நாளன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திற்கு இடமில்லை என்றும் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து செயல்படும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 29.3.2005



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாடு வளர்ச்சி பெறவும், உயர்நிலை அடைந்திடவும் உறுதுணையாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். தாங்கள் பிறந்த பொன் நாடு மேன்மை அடைந்திட தங்களது இரத்தத்தை வியர்வைத் துளிகளாக்கி, நல்உழைப்பை நல்குபவர்கள், தொழிலாளர்கள். புது உலகை உருவாக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள், தொழிலாளர்கள்.

அத்தகைய தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அமைப்புச் சாரா தொழிலாளர்களாகவே உள்ளனர். இத்தகைய அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமை ஆகும்.

நாடு நலம் பெறுவதற்காகத் தங்களது உடல் உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும்; அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்தி, அவர்களது வாழ்வு வளம் பெற்றிடவும்; சமுதாயத்தில் அவர்களுக்குத் தக்கப் பாதுகாப்பு அளித்திடவும்; இந்தியாவிலேயே முதல் முறையாக, 1982ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் என்ற ஒரு முழுமையான சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில், உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாரியத்தினை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 1994ஆம் ஆண்டில், கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினேன். மேலும், 1994ஆம் ஆண்டே தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் உருவாக்கினேன். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 1995ஆம் ஆண்டு மே மாதம் முதல் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு



வருகிறார்கள். தற்போது, 6,30,812 நபர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் உயிர் இழக்கும்போது, அவர்களது குடும்பங்களுக்கும்; விபத்தில் நிரந்தர முடக்கமோ அல்லது உடல் உறுப்புகள் இழப்போ ஏற்படும் போது அத்தகைய தொழிலாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது.

1994ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கான வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்க நான் முடிவு எடுத்தேன். 2001–2002ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான ஒய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தொய்வின்றி, தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கு ஏதுவான வழிமுறைகளைக் கண்டறிய, ஒய்வூதிய நிபுணர் ஒருவர் (Actuary) நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் சிறப்புப் பணிப் பிரிவு – அதாவது Task Force ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சிறப்புப் பணிப் பிரிவு அறிக்கையின் அடிப்படையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, 60 வயது நிரம்பிய கட்டுமானத் தொழிலாளர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொடர்ந்து 5 வருடங்களாவது பதிவு பெற்ற உறுப்பினராக இருப்பாராயின், அவருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ஒய்வூதியமாக வழங்கப்படும். 60 வயதுக்கு முன்னரேயே, நிரந்தர உடல் முடக்கம் ஏற்பட்டாலோ; அல்லது உடல் நலக் குறைவால் பணி செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலோ; அவர்களும் மாதந்தோறும் 200 ரூபாய் ஒய்வூதியம் பெறத் தகுதி உடையவர் ஆவர்.

இவ்வாறு வழங்கப்படும் ஒய்வூதியத்தை, மேற்சொன்ன தகுதிகளின் அடிப்படையில், 2000ஆம் ஆண்டு முதலே அவரவர் தகுதி பெற்ற தேதியிலிருந்தே வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். இத் திட்டத்தின்படி, நாளது தேதி வரை, 60 வயது நிரம்பிய 3,021 கட்டுமானத் தொழிலாளர்கள் ஒய்வூதியம் பெறுவார்கள். இதற்கு ஏற்படும் செலவு 1.46 கோடி ரூபாய் ஆகும். மேலும், அடுத்த ஆண்டு அதாவது 2005–2006ஆம் ஆண்டு ஒய்வூதியம் பெறத் தகுதி அடையும் 1,752 நபர்களுக்கான ஒய்வூதியத்தையும் சேர்த்து 4,773 நபர்களுக்கு வரும் நிதி ஆண்டுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவாகும்.

கட்டுமானப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் உறுதியான தங்களது உடல் திறனில் அடிப்படையிலேயே அப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும், நிரந்தர உடல் முடக்கம் மற்றும் உடல் நலக் குறைவு ஏற்படும் போதும், எந்தப் பணியும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, ஒரு அவ நம்பிக்கையுடன் வாழ வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். அத்தகையோர் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையைப் பெறும் வகையிலும், ஒட்டுமொத்த கட்டுமானத் தொழிலாளர் வர்க்கமும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பைப் பெறுகின்ற வகையிலும் அவர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை இந்தப் புதிய ஒய்வூதியத் திட்டம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *



*முதன்முதலில் தொலைபேசி இணைப்பகம் இலண்டனில் 1879இல் தொடங்கப்பட்டது. அப்போது தொலைபேசியை பயன்படுத்தியவர்கள் 7 பேர்கள் மட்டுமே.*

# குமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரம்


வன வளமும், மலை வளமும், கடல் வளமும் ஒருங்கே பெற்ற எழில்மிகு மாவட்டம் கன்னியாகுமரி. இம்மாவட்டத்தின் அனைத்து கிராமங்களும், நகரங்களைப் போன்றே மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புகளோடு திகழ்கின்றன. அனைத்து இயற்கைச் செல்வங்களையும் பெற்றிருப்பினும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, சுற்றுச்சூழலை சுகாதாரமாகப் பாதுகாப்பது அனைவரின் கடமை என்ற அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதார இயக்கத்தை அரசு செயல்படுத்தியது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், நகர்புறத்தில் மட்டுமே மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளதால் அப்பகுதிகளில் மட்டுமே சுகாதார வசதிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையோடு இணைந்து வாழும் கிராம மக்கள் திறந்த வெளியையே கழிப்பிடங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையை அகற்றி கிராமப் பகுதிகளையும் சுகாதாரமாகப் பேணி, நோய் – நொடியற்ற சூழலை உருவாக்குவதே முழுச் சுகாதார இயக்கத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதார இயக்கம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கழிப்பறை வசதியில்லாத தனி நபர் வீடுகள், குடியிருப்புகள், பள்ளிகள், கணக்கெடுக்கப்பட்டு, முழுச் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த முன்னோடி மாவட்டமாக, குமரி மாவட்டம் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.5.81 கோடி மதிப்பீட்டில் 2001 ஆம் ஆண்டு முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதியில்லாத, 38,800 தனி நபர் இல்லங்கள், 250 அரசுப் பள்ளிகள், 390 குழந்தைகள் நல மையங்கள் ஆகியவற்றில் கழிப்பறைகள் கட்ட அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவி மற்றும் பயனாளிகள் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. முழுச் சுகாதார இயக்கம் குறித்தான விழிப்புணர்வினை கிராம மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் சைக்கிள் பேரணிகள், பள்ளி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்ட மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள், கிராமியக் கலைஞர்களது இசை நிகழ்ச்சிகள், தெருமுனை நாடகங்கள், துண்டுப் பிரசுரங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள், தொலைக்காட்சி பிரச்சாரங்கள், சுவரொட்டிகள் மற்றும் பத்திரிகைச் செய்திகள் போன்ற தகவல் பரிமாற்றச் சாதனங்கள் மூலம் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் தொண்டு நிறுவனங்கள், தேசிய சீரமைப்புப்படை தொண்டர்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளிலுள்ள நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் மூலமும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.


தனி நபர் கழிப்பறைகள் கட்ட ரூ.500 மதிப்பிலான 2 மூட்டை சிமெண்ட் கழிப்பறைக் கோப்பை உட்பட கழிப்பறை சாதனங்கள் இலவசமாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. பயனாளிகள் தங்களது தேவை மற்றும் பொருளாதார வசதிக்கேற்ப இப்பொருட்களை பயன்படுத்தி கழிப்பறையினைக் கட்டிக்கொள்ளலாம்.



இத்திட்டம் குமரி மாவட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள 99 கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக முழுமையான சுகாதார வசதி பெற்ற ஊராட்சி ஒன்றியங்களாக ஒரே நாளில் தக்கலை மற்றும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியங்கள் அறிவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து திருவட்டார் ஊராட்சி ஒன்றியமும் முழுச் சுகாதார வசதிபெற்ற ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்கப்பட்டது. இந்தியா விலேயே முதலாவதாக குமரி மாவட்டத்தில் தான் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் முழுச் சுகாதார வசதிப் பெற்றவைகளாகத் திகழ்கின்றன. குமரி மாவட்டத்தில் மீதமுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் முழுச் சுகாதாரத்

திட்டப்பணிகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ஜனவரி 31ஆம் தேதி வரை கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்புகளின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களின் 45 ஆயிரத்து 579 வீடுகளில் 44 ஆயிரத்து 709 வீடுகளில் கழிப்பறைகள் உள்ளன. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் 1 இலட்சத்து 93 ஆயிரத்து 661 வீடுகளில் 1 இலட்சத்து 81 ஆயிரத்து 835 வீடுகளில் கழிப்பறை வசதி உள்ளன. மொத்தம் 94.69 சதவிகிதம் வீடுகள் கழிப்பறை வசதிகளுடன் மாநிலத்திலே முதல் இடத்தில் குமரி மாவட்டம் திகழ்கிறது.



அகில இந்திய அளவில் முழுச் சுகாதாரத் திட்டத்தை சிறப்பாக அமல்படுத்தும் ஊராட்சிகளுக்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை ஆண்டுதோறும் வழங்கும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதிற்காக இந்த ஆண்டிற்கு தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 11 ஊராட்சிகளும் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த மேல்புறம் ஊராட்சி ஒன்றியமும் தேர்வுச் செய்யப்பட்டன. ஒரு முழு ஊராட்சி ஒன்றியமும் விருதிற்கு தேர்வுச் செய்யப்பட்ட பெருமை குமரி மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் தேவகோடு, மலையடி, மஞ்சாலுமூடு, முழுக்கோடு, புலியூர்சாலை, வெள்ளாங்கோடு, விளவங்கோடு, மருதன்கோடு, வன்னியூர், மாங்கோடு ஆகிய 10 ஊராட்சிகள் உள்ளன.

கிராம் புரஸ்கார் விருதிற்காக தேர்வு செய்யப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:—

கன்னியாகுமரி மாவட்டம் கற்றவர்கள் அதிகம் உள்ள மாவட்டம் என்பதால் முழுச் சுகாதார இயக்கம் குறித்த விழிப்புணர்வு மாவட்ட மக்களிடம் நன்றாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரத் திட்டம் சிறப்பாகச் செயல்பட மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மிகுந்த ஆர்வமுடன் ஒத்துழைத்தமையால் குமரி மாவட்டத்தில் மொத்தமுள்ள 99 கிராம ஊராட்சிகளில் இதுவரை 53 ஊராட்சிகள் முழுச் சுகாதாரம் பெற்றவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஊராட்சிகளும் முழுச் சுகாதாரம் பெற்றவைகளாக அறிவிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழுச் சுகாதார இயக்கம் உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் ரூ.10 கோடியில் சுகாதாரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.




முழுச் சுகாதாரத் திட்டத்தில் சிறப்பாக விளங்கும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் இந்த ஆண்டிற்கு அகில இந்திய அளவில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதிற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது குமரி மாவட்டத்திற்கு கிடைத்துள்ள பெருமை மட்டுமன்றி திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தும் தமிழக அரசிற்கு கிடைத்த அங்கீகாரமும் ஆகும்.

— கு. தாணப்பா
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி*

தமிழகத்தின் இயற்கை வளத்தை மேம்படுத்த

# தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 4.4.2005




மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லுகின்ற போது, பெருகி வரும் தொழிற்சாலைகள், நகர்மயம் ஆதல் ஆகியன தவிர்க்க இயலாதவையாக அமைந்து விடுகின்றன. அத்துடன் மக்கள் தொகைப் பெருக்கமும் சேர்கின்ற போது இதனுடைய விளைவுகள் இயற்கைச் சூழலுக்கு பங்கம் விளைவித்து சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்து விடுகின்றன. நாட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச் சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப் பிணைந்து செயல்படுவதன் மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்க முடியும். எனவே தான் தமிழகத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் எந்த அளவு உயரிய முக்கியத்துவத்தை நான் அளிக்கின்றேனோ, அதே அளவு முக்கியத்துவத்தை இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் நான் அளித்து வருகிறேன்.

காடுகளை ஒட்டி உள்ள கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், அதிகரித்து வரும் தங்களது தேவைக்கு ஏற்ப, தாங்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளை அபரிமிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாகவும், காட்டுத் தீ முதலான இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் காடுகள் வளம் குன்றிப் போகின்றன. இவ்வாறு வனங்கள் வளம் குன்றிப் போவதன் காரணமாக சுற்றுச் சூழல் சம நிலை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இந்தப் பாதிப்பினை நீக்கும் வகையிலும்; வனப் பகுதிகளைச் சார்ந்துள்ள கிராம மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும்; தமிழகத்தில் உள்ள வன வளத்தைப் பெருக்கிட வேண்டும் என்று முடிவெடுத்து எனது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1994ஆம் ஆண்டிலேயே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தைப் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்திட முனைந்தேன். அதன் அடிப்படையில் வன வளர்ப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டது. இந்த நிதி உதவி பெறப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு வரை செயல் படுத்தப்பட்டது. 684 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் மூலம் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள வளம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டதுடன் இக்காடுகளை ஒட்டி உள்ள 1,367 கிராமங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

செயற்கைக் கோள் படங்கள் தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் வனப் பரப்பு மற்றும் காடுகளின் அடர்த்தி உயர்வு அடைந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டதனாலேயே இது சாத்தியம் ஆயிற்று. எனவே, தமிழகத்தின் வன வளத்தை மேலும் மேம்படுத்த வேண்டும், வளம் குன்றிய காடுகளின் வளத்தை மேலும் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ந்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில்,ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி

நிறுவனத்தின் உதவி கோரி திட்டக் கருத்துரு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கான கடன் பெறப்படாத நிலையில் இந்தக் காடு வளர்ப்புத் திட்டம் தொய்வின்றிச் செயல்படும் வகையில், 2004–2005ஆம் ஆண்டுக்கு மாநில அரசே நிதி ஒதுக்கீடு வழங்க ஆணையிட்டேன். அதன் அடிப்படையில்,மாநில அரசு 69.09 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. தற்போது தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II என்ற திட்டத்தைச் செயல்படுத்திட ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் கடன் உதவி வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் உரிய கடன் உதவி



வழங்குகின்ற ஒப்பந்தம், மைய அரசுக்கும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி நிறுவனத்திற்கும் இடையே 31.3.2005 அன்று கையொப்பம் ஆகி உள்ளது. இதன் மூலம், நடப்பு நிதி ஆண்டு முதல், 8 ஆண்டுகளுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் 409.08 கோடி ரூபாய் கடன் வழங்கும். மாநில அரசு தனது பங்காக 158.34 கோடி ரூபாய் வழங்கும்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை IIன் கீழ் ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்பு மேம்பாடு, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு ஆகியவற்றின் கீழ் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்பு மேம்பாடுத் திட்டத்தின் வாயிலாக 650 கிராமங்களிலும் அதனை ஒட்டிய 4,06,250 ஏக்கர் பரப்புள்ள வளம் குன்றிய காடுகளிலும் மேம்பாட்டுப் பணிகளும், காடு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். அதே போல மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மலைவாழ் மக்கள் வசிக்கின்ற 150 கிராமங்களில் மக்கள் நலப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த கிராமங்களை ஒட்டிய 37,500 ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் வனத் தோட்டம் அமைக்கும் பணிகள், மண் மற்றும் நீர்ப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மழை நீர் சேகரிப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். வனங்கள் பாதுகாக்கப்படுவதில் பொது மக்களின் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இப்பணிகளுக்காக 218.91 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

திட்டக் கிராமங்களில் குறைந்த பட்ச அடிப்படை சமுதாய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராம மக்களின் வருவாய் பெருக்கிட மாற்று வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, வருவாய் பெருக்கிட வழிவகை செய்யப்படும். இதன் வாயிலாக, காடுகள் அழிக்கப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்படும். 800 கிராமங்களில் மேற்கொள்ளப்பட உள்ள இந்தப் பணிகளுக்காக 86.94 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

மேலும், திட்டப் பணிகளை மேற்கொள்ளும் களப் பணியாளர்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், பயிற்சி, வன விரிவாக்கப் பணிகள் போன்றவையும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள வளம் குன்றிய காடுகளை மேம்படுத்தி, அதனை ஒட்டி உள்ள கிராமப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தின் இயற்கை வளம் மேம்படும்; வன வளம் பெருகி சுற்றுச் சூழல் சம நிலை உருவாகும். மேலும் வனங்களை ஒட்டி உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் வனங்களுடன் இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளவும்; வனச் செல்வங்களைப் பாதுகாத்து அதே நேரத்தில் தங்களது வாழ்க்கை வளத்தை மேம்படுத்திக் கொள்ளவும்; இந்தத் திட்டம் வழி வகுக்கும் என்று தெரிவித்து அமைகிறேன். □



# தமிழக அதிரடிப்படையின் சாதனையால் இந்தியாவின் காவல்துறைக்கு உலக அளவில் கௌரவம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு பிரதமர் அவர்களே,

மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களே,

மாநில முதலமைச்சர்களே மற்றும் மத்திய மாநில முதுநிலை அலுவலர்களே,

உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டியதற்காகவும், அதில் எனது கருத்துகளை அளிக்க வாய்ப்பு அளித்ததற்காகவும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமயமாக்கல் கொள்கையால் இந்தியப் பொருளாதாரம் அதிகரித்து ஏற்றுமதி வர்த்தகமும் பெருகியுள்ள சூழ்நிலையில் அதற்கு நாம் கொடுக்க வேண்டிய விலையும் அதிகரித்துள்ளது. திட்டமிடப்பட்டுள்ள குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல், பணப்பரிமாற்றம், கள்ளச் சந்தையில் ஆயுத விற்பனை ஆகியவற்றின் களமாக மட்டுமின்றி அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதத்துடன் கைகோர்க்கும் நிலையும் இங்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உடனான நமக்குள்ள பிரச்சினையால் இந்தியாவில் தீவிரவாதம் என்பது அண்டை மாநிலப் பிரச்சினை என்ற அளவிலேயே இதுவரை அணுகப்பட்டுள்ளது. இந்த நிலை அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் பயங்கரவாதத்துக்கு உள்ளாகி 2001 செப்டம்பர் 11இல் தகர்க்கப்பட்ட பிறகு மாறியுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் இந்தத் தாக்கத்திற்கு ஆளாகி உள்ளது. சில மாநிலங்களில் வகுப்புக் கலவரம்




நேர்வதற்கானச் சூழலில், இதனைத் தூண்டி விட அடிப்படைவாதிகள் நிதியுதவி செய்கின்ற நிலையும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தீவிரவாதிகளின் செயல்கள் குறித்த பிரச்சினைகளை அணுகுவதும், மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவியை மறுஆய்வு செய்வதும் அவசியமாகிறது.

**வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனை**

இத்தகையச் சூழலிலும் தமிழ்நாட்டைப் பொருத்த வரை சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு வருவதை நான் உறுதி செய்துள்ளேன். நாட்டிலேயே சட்டம் ஒழுங்கைக் காப்பதில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் சிறப்பு அதிரடிப் படையினர் நன்கு திட்டமிட்டுச் செயல்படுத்திய முயற்சியின் பயனாகத் தமிழகம் மற்றும் அண்டை மாநிலமான கர்நாடகாவுக்கும் 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைவலியாக இருந்து தொல்லை கொடுத்து வந்த காட்டுக் கொள்ளையன் வீரப்பன் கடந்த 2004ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் தேதி தமிழக அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டான்.

எனது அரசு அதிரடிப்படைக்கு அளித்த முழு ஒத்துழைப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான அதிநவீனத் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றுடன் அவர்களுக்கிடையே உள்ள கட்டுக்கோப்பான நடவடிக்கை, தகவல்களைத் திரட்டித் தருவதில் உள்ள உத்தி, அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவை காரணமாக வீரப்பனைக் கொன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை புரிந்து இருக்கிறோம்.

**உறுதியான முடிவுகள்**

இந்தச் சரித்திர சாதனை இந்தியாவில் மட்டுமல்ல உலக அரங்கிலும் மிகப்பெரும் பாராட்டைப் பெற்றது. இதன்மூலம் இந்தியாவின் காவல்துறைக்கு உலக அளவில் கௌரவம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; காவல் துறையினருக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தால் அவர்கள் தங்கள் திறமையையும் அர்ப்பணிப்பு உணர்வையும் வெளிப்படுத்தி உலக சாதனை புரிவார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

தீவிரவாதிகள், நக்சலைட்டுகள் ஆகியோரை அடியோடு ஒடுக்குவதற்கு மென்மையான அணுகுமுறை என்பது ஒருபோதும் உதவாது. அது அதில் ஈடுபடுகிறவர்களைப் பலவீனப்படுத்துவதற்குப் பதில் பலப்படுத்தியதாக அமைந்துவிடும். எனவே இதுபோன்ற தருணங்களில் முடிவுகள் எடுக்கும்போது குழப்பமற்ற உறுதியான முடிவுகள் எடுத்து, எனது அரசு தீவிரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கி இருக்கிறது.

### தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுப்பு

இவ்வாறு, எனது அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் எல்.டி.டி.ஈ யினரின் நடமாட்டம் முற்றிலும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இந்த அமைப்பு 1967 சட்டத்தின் கீழும், 2002ஆம் ஆண்டு பொடா சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் மற்றும் தமிழ்நாடு விடுதலைப் படை போன்ற இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவி வருகின்றன என்ற செய்தியின் அடிப்படையில் 1908ஆம் ஆண்டு குற்றத் திருத்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டன.

மேலும், மாநில அரசின் பரிந்துரையின் பேரில் இந்த அமைப்புகளை மத்திய அரசும் தடை செய்தது. இருப்பினும் தமிழ்நாட்டில் வாழும் 52 ஆயிரம் இலங்கை அகதிகளில் 17 ஆயிரம் பேர் முகாமிற்கு வெளியே வாழும் நிலையில், இவர்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. என்னால் 1994இல் அமைக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புக் குழுவினரால் 1076 கி.மீ. நீளமுள்ள தமிழகக் கடலோரப் பகுதிகளில் 60 சோதனைச் சாவடிகள் அமைத்தும், 441 கடலோரக் கிராமப்புறங்களில் உள்ள விழிப்புணர்வுக் குழுக்களின் உதவியால் எரிபொருள்கள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவதும், தீவிரவாதிகள் ஊடுருவுவதும் தடுக்கப்பட்டன.

அதன்பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தப் படையை வலுப்படுத்தவில்லை. சில மாதங்களுக்கு முன் கடலோரப் பாதுகாப்புப் படைப் பிரிவை வலுப்படுத்த ஒரு தனிப்படைக்கு (Special Battalion) அனுமதி அளித்தேன்.

இதன்மூலம் எல்.டி.டி.ஈ. நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

### ஒன்றிணைந்த தனி அமைப்பு தேவை

இந்தப் படைப் பிரிவுக்குப் போதுமான அளவிற்கு ஆயுதங்கள் வழங்க 25 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு விரிவான திட்டம் ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருந்தேன். அதற்கு விரைவில் அனுமதி அளிக்க வேண்டும்.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க ஒரு புதிய அணுகுமுறை தற்போது அவசியமாகிறது. தீவிரவாத அமைப்புகளுடன் சட்ட விரோத ஆயுதக் கடத்தல்காரர்கள், போதைப்பொருள் கடத்தும் குற்றவாளிகள் என்று கைகோர்த்துச் செயல்படும் விபரீதப் போக்கைக் கட்டுப்படுத்த மாநில காவல்துறை புலனாய்வுப் பிரிவு சுங்க மற்றும் உள்நாட்டு வருவாய்துறை போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, கடலோரப் பாதுகாப்புப் படை இவற்றோடு "ரா" என்னும் நுண்ணறிவுப் புலனாய்வு அமைப்பும் ஒன்றிணைந்த தனி அமைப்பு தேவைப்படுகிறது. அப்படியொரு அமைப்பு உருவாக வழிகாண வேண்டும்.

### தீவிரவாதத்தை வளர்க்க அந்நியச் சக்திகளின் நிதியுதவி

நக்சலைட்டுகளால் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு மிரட்டல் ஏற்பட்டுள்ளது. மிகுந்த வறுமை, கடன்சுமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சுதந்திரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்களை மக்கள் யுத்தக்குழு போன்ற அமைப்புகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தீவிரவாதத்தை வளர்த்து வருகின்றனர். இந்த அமைப்புகளுக்கு அந்நியச் சக்திகளின் நிதியுதவிகளும் உள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில் நக்சலைட்டு தீவிரவாதம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம் மற்றும் கருநாடகாவில் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டின் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் எல்லைகள் இந்த மாநிலங்களுடன்




மும்முனை இணைப்புப் பகுதியாக உள்ளது. இந்த மும்முனைப் பகுதி இவர்களின் செயல்பாட்டுக்கு ஏற்ற இடமாக உள்ளது.

இந்நிலையில் நக்சலைட்டுகள் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவும் ஆபத்து உள்ளதால் இந்தக் குழுக்களை 1908ஆம் ஆண்டு குற்றத் திருத்த சட்டத்தின் மூலம் சட்ட விரோதக் குழுக்கள் என்று அறிவிக்கச் செய்தேன்.

**மாற்றுச் சட்டம் உருவாவது அவசியம்**

தொடர்ந்து, நக்சல் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையில் அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தலைமறைவாக வாழும் முக்கியப் புள்ளிகள் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த நக்சல் குழுக்களின் நடமாட்டம் வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி காட்டுப்பகுதிகளில் நடமாட வாய்ப்புள்ளதாக உளவுப் பிரிவின் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அண்டை மாநிலங்களின் உளவுப்பிரிவு முடுக்கி விடப்படவேண்டியது மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிடையே ஒருங்கிணைப்பும் தேவைப் படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு யோசனையை முன்வைக்க விரும்புகிறேன். அண்டை மாநிலங்களோடு எல்லைகளைக் கொண்ட மாநிலங்களிடையே ஒருங்கிணைந்த முயற்சி அவசியம். அதற்கு வகைசெய்ய வேண்டும்.

வன்முறை – பயங்கரவாதத்துக்கு ஆளாகாத மாநிலம் இல்லை என்ற நிலையில், பொடா பயங்கரவாதச் சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ள சூழலில் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் ஓர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதனைச் சரிசெய்யும் விதமாக மாநில அரசுகளுக்குப் போதிய அதிகாரங்கள் அளிக்கும் வகையில் மாற்றுச்சட்டம் ஒன்று உருவாவது அவசியமாகிறது. அதற்கு விரைவில் வகை செய்யப்பட வேண்டும்.

நக்சல்களை ஒடுக்குவதில் இருவழி அணுகுமுறையைக் கையாண்டு அதில் நாங்கள் வெற்றியும் பெற்றிருக்கிறோம். அவை, நக்சல்களைத் தனிமைப்படுத்துவது; இன்னொன்று தலைமறைவாக இருந்து செயல்படும்



நக்சல்களுக்குத் துணை நிற்கும் சக்திகளை ஒடுக்குவது ஆகியவை ஆகும். நக்சல்களை தனிமைப்படுத்துவது என்றால் நக்சல்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு திட்டமாகும். அந்த வகையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுக்க என கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் சாலைகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்த 2004–05ஆம் ஆண்டு ரூபாய் 7 கோடி ஒதுக்கப்பட்டது. மேலும், இப்பகுதியில் மேற்கொள்ளப் பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பதற்றமான கிராமங்கள் எனக் கண்டறியப்பட்ட 47 கிராமங்களில் இருந்து இராணுவம் மற்றும் காவல் துறைப் பணிக்கு 400 இளைஞர்கள் பயிற்சிக்கு எனத் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் இருந்து 78 இளைஞர்கள் இந்திய இராணுவத்திற்குத் தேர்வு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் 62 பெண்கள் மாநில காவல் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நக்சலைட்டு தீவிரவாதிகள் அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் உள்ள இளைஞர்களை இராணுவம், பாராமிலிட்டரி மற்றும் மாநில காவல்துறையில் பணியாற்ற பெருமளவில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இளைஞர் மற்றும் காவல்துறையினர் இணைந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது குக்கிராமங் களுக்கென நடமாடும் நூலகங்களை இயக்குவது என்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அளவில் 55 மாவட்டங்கள் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று கண்டறியப்பட்டு மத்திய அரசால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**அமைதியும் சமாதான நிலையும்**

ஆனால் அதுபோன்ற உதவிகள் எதுவும் தமிழகத்துக்கு ஒதுக்கப்படவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆந்திராவைப் போன்று தமிழகத்திலும் பாதிப்புகள் உண்டு.

ஆனாலும் உதவி அளிக்கப்படவில்லை. இதுவரை இந்தப் பகுதிகளுக்குத் தமிழக அரசுதான் தனது சொந்தச் செலவில் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு வழங்கும் நடைமுறையில் மாற்றம் வேண்டும்.

எனது அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளால் மதக் கலவரங்கள் பெருமளவில் குறைந்துள்ளன. குறிப்பாக, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, சிவசேனா மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்பினர் 2004ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் தேதியில் இருந்து 26ஆம் தேதி வரை நடத்திய விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் அமைதியான முறையில் நடைபெற்றன.

2002இல் 20 ஆக குறைந்து, 2003–2004இல் 13 மற்றும் 12 என்ற நிலையை எட்டியது. நடப்பாண்டில் இப்போது வரை இரண்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

**பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு**

பெண்களுக்கு அதிகாரம் மற்றும் சமூகத்தில் பாதுகாப்புப் போன்ற விஷயங்கள் என் இதயத்திற்கு நெருக்கமாக உள்ளவை. இதனைச் செயல்படுத்த கடந்த 1992ஆம் ஆண்டு முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் தொடங்கி வைத்தேன். அது தற்போது 195 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2.6.2003 முதல் பெண் கமாண்டோ படை என்னால் அமைக்கப்பட்டது. அவர்களுக்கு ஆண்கள்



மதவாதப் பிரச்சினைகளிலும் அரசு கடந்த 3 ஆண்டுகளாக எடுத்துவரும் நடவடிக்கைகள் தேவையான நல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 2003ஆம் ஆண்டு மதக் கலவரங்கள் எண்ணிக்கை 11இல் இருந்து கடந்த 2004ஆம் ஆண்டில் 2 ஆக குறைந்துள்ளன. 31.3.2005 வரை எந்த சம்பவமும் நடைபெறவில்லை. மாவட்டங்கள்தோறும் அமைதிக் குழுக்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டு அமைதியும், சமாதான நிலைமையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது; சாதிமோதலும் இல்லை.

இதன் பயனாகக் காவல்துறை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் 2001ஆம் ஆண்டு 32 ஆக இருந்தது.

போலவே அதிநவீன ஆயுதங்கள், வாகனம் ஒட்டுதல், குதிரைச் சவாரி போன்ற அனைத்திலும் ஆண்களுக்கு நிகராகப் பயிற்சிகள் அளிக்கப் பட்டன.

தற்போது இதில் மொத்தம் 1,078 பெண் காவல் அதிகாரிகள் உள்ளனர். பெண்கள் தங்கள் பிரச்சினைகளுடன் பயம் இல்லாமல் நம்பிக்கை யுடன் அணுகும் வகையில் தற்போதுள்ள காவல் நிலையங்கள் அனைத்திலும் ஒரு பெண் துணை ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன். இதற்கென 881 பெண் துணை ஆய்வாளர்களும், 2,013 காவலர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி




முடிந்தவுடன் காவல் நிலையங்களில் பணி அமர்த்தப்படுவார்கள்.

இது தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் கலர் டி.வி., வி.சி.ஆர்., விழிப்புணர்வு கேசட்டுகள் கொண்ட நடமாடும் கலந்தாய்வு வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கிராமப்புறங்களில் பெண்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க உதவும். இந்த முறைக்குப் பெண்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது.

பெருகிவரும் மக்கள் தொகை, தொழில் மயமாக்கல், வியாபார நிறுவனங்களின் பெருக்கம், பெரும் நகருக்கு அருகில் உள்ள பகுதிகளை நகர எல்லைக்குள் கொண்டு வர வேண்டிய சூழ்நிலையில் குற்றங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் பெருகிவிட்டன. இதனைச் சமாளிக்க புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது.

சென்னைப் பெருநகரில் காவல்துறை ஆணையரக அதிகார எல்லையை விரிவுபடுத்தி சென்னை நகரில் இருக்கும் அனைத்துக் காவல் நிலையங்களையும் ஒருங்கிணைத்து அதற்கான அறிவிப்பை அண்மையில் வெளியிட்டு இருக்கிறேன். இதற்கென 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒரு திட்டத்திற்கும் அனுமதி வழங்கி இருக்கிறேன். மேலும், செங்கல்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தைச் சேர்ந்த 41 சட்டம் ஒழுங்கு மற்றும் 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சென்னைப் பெருநகர் ஆணையர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துள்ளேன். இதன் பயனாகப் புதிய இயக்குநரகத்தின் கீழ் 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்பட 155 காவல் நிலையங்கள் செயல்படும்.

**காவலர்களுக்கு வீடுகள்**

காவலர் குடியிருப்பு வசதியைப் பொருத்தவரை அவர்களுக்கென சிறந்த குடியிருப்புகளை வழங்கும் விஷயத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதுவரை எனது அரசு 6,315 வீடுகளைக் கட்டியுள்ளது. 2004–2005ஆம் ஆண்டு மட்டும் ரூபாய் 94.25 கோடி செலவில் 2,449 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. காவலர் வீட்டு வசதிக்கென மத்திய அரசு வழங்கியுள்ள நிதி முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 20 சதவிகித முதல்நிலைக் காவலர்களுக்கு

குடியிருப்பு வழங்க மத்திய அரசு தேவையான நிதியுதவி வழங்க வேண்டும்.

நவீன யுகத்தில் குற்றங்களும் அதை செயல்படுத்துவதிலும் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் காவல் துறையினர் அதனைச் சமாளிக்கத் தேவையான கருவிகளை வழங்குவதில் சுணக்கம் கூடாது.

இந்த விஷயத்தில் மத்திய அரசு வழங்கி வரும் நிதியுதவி தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2001–2003) மத்திய அரசு வழங்கியுள்ள நிதி ரூ.136.20 கோடி மட்டுமே. இந்த நிதி எங்களால் முழுவதுமாகச் செலவழிக்கப்பட்ட நிலையிலும், கடந்த 2003–2004ஆம் ஆண்டு இந்த உதவி ரூ.52.47 கோடியாகக் குறைந்து 2004–2005ஆம் ஆண்டுக்கு ரூ.42.8 கோடியாக மேலும் குறைந்துவிட்டது.

தமிழகம் B2 மாநிலமாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசின் உதவி 60 சதவிகிதம் என்ற குறியீட்டுக்குள் உள்ள நிலையில் மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதில் சிரமம் உள்ளது.

மேலும், 12ஆவது நிதி கமிஷன் அறிக்கையிலும் இதற்கென எந்த ஒதுக்கீடும் அறிவிக்கப்படவில்லை.

அமைதி, முன்னேற்றம் மற்றும் நல்லாட்சி என்ற கொள்கைகளின் அடிப்படையில்தான் மக்கள் ஆட்சி செய்ய நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்.

**பொது அமைதி ஏற்படுத்த வேண்டும்**

குற்றமற்ற சமூகம் மற்றும் அச்சமற்ற நிலை என்பது தான் சமாதானத்திற்கான அடிப்படை விஷயங்கள். பொது அமைதியை நிலை நாட்டுவதற்குத் தீவிரவாதத்தை எதிர்கொள்ள நமது நேரத்தைச் செலவிடாவிட்டால், விரைவான, நாம் விரும்பும் வேகமானப் பொருளாதார முன்னேற்றங்களை அடையமுடியாது. மக்களின் இந்த அடிப்படை விருப்பங்களை நிறைவேற்ற மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். இந்த முயற்சிக்கு மத்திய அரசு, கூடுதல் ஆதரவு அளிக்கும் என நான் நம்புகிறேன்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 15.4.2005 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.




# தமிழ்நாட்டில் நோக்கியா செல்பேசித் தொழிற்சாலை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 6.4.2005

தொழில்நுட்பத் தகுதிகள் மிகுந்த மனித வள ஆற்றலை வெகுவாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகம். இந்த ஆற்றலைப் பயன்படுத்தி பல வகைத் தொழில்களை வெற்றிகரமாக நடத்திட ஏற்றதும் வலுவானதுமான திறம் மிகுந்த தொழில் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு உருவாக்கி உள்ளது. இதன் பயனாக தொழில் முனைவோர் விரும்பி நாடி வரும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

2003–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நான் வெளியிட்ட புதிய தொழில் கொள்கையை மாண்புமிகு







மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் வேலைவாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. இதனைக் கருத்தில் கொண்டே, "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம்" என்று பாடிய மகாகவி பாரதியார் "உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்று கூறினார். தமிழகத்தில் பாரதியின் கனவை நனவாக்கிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் பல்வேறு முனைப்பான முன் முயற்சிகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

பேரவை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி இக்கொள்கையில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேலும் புதிதாக முதலீடுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் பற்றியும் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரிவான கொள்கை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்; போதிய அளவில் தரமான எரிசக்தி வழங்குதல்; விரிவான வரிச் சீர்திருத்தங்கள்; தொழிலாளர் சார் சீர்திருத்தங்கள்;

நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். 300 கோடி ரூபாய்க்கு மேற்படும் முதலீட்டுக்குச் சிறப்பு ஊக்க உதவித் தொகுப்பு அளிக்கப்படும் என்றும் இத்தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை செயல்படுத்தப் படுவதன் பயனாக தமிழ்நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக முதலீடுகள் செய்வது தொடர்பாக மத்திய அரசிடம் ஏராளமான எண்ணிக்கையில் தாக்கல் செய்யப்படும் புதிய தொழில் முனைவோர் குறிப்பாணைகள் – Industrial Entrepreneur Memorandum - இதற்குச் சான்று பகர்கின்றன.

**செல்லிடத் தொலைத் தொடர்புத் துறையில் உலக அளவில் தலையாய நிறுவனமாகத் திகழும் நோக்கியா (Nokia) நிறுவனம், இந்தியாவில் தன்னுடைய தயாரிப்புப் பிரிவை நிறுவ தமிழ்நாட்டில் சென்னையை இன்று தெரிவு செய்துள்ளது என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.**

செல்லிடத் தொலைபேசிகளின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் நோக்கியா நிறுவனமும் ஒன்று. இன்றைக்கு உலகம் முழுவதும் விற்பனை ஆகும் செல்லிடத் தொலைபேசிகளுள் மூன்றில் ஒன்று நோக்கியா நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். பின்லாந்தைத் (Finland) தலைமை இடமாகக் கொண்ட நோக்கியா நிறுவனம், உலகெங்கிலும் 9 இடங்களில் தன்னுடைய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. சென்னையில் அமைய இருக்கின்ற இந்தப் புதிய தொழிற்சாலை இந்தியாவில் தொடங்கப்படும் முதலாவது ஆலையாகவும்; நோக்கியாவின் பத்தாவது ஆலையாகவும் அமையும். உலக அளவில் நோக்கியா நிறுவனப் பொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு 29.27 பில்லியன் யூரோ அதாவது 1,65,522 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகின்றன. நோக்கியா நிறுவனம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகள், தொழிலகத் தீர்வுகள் - Enterprise Solutions; பிணையச் சாதனங்கள் – Network Equipment - முதலிய பல்வேறுபட்டப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் நோக்கியா நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டங்கள் குறித்து அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் என்னிடம் விரிவாக எடுத்துக் கூறினர். நோக்கியா நிறுவனம், தன்னுடைய தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஏற்ற இடத்தைத் தெரிவு செய்வதற்காக பல மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு இடங்களில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. மிக நுணுக்கமாகவும், விரிவாகவும் ஆய்வு செய்த பிறகு நோக்கியா நிறுவனம் தன்னுடைய தொழிற்சாலையை அமைக்க சென்னையைத் தெரிவு செய்துள்ளது. சென்னையில் அமையப் பெற்றுள்ள மிகச் சிறந்த வசதிகள்; நேர்த்தியான அடிப்படைக் கட்டமைப்பு; சிறப்பான வணிக – இயற்கைச் சூழல் அமைப்பு; சிறப்பான சட்டம் – ஒழுங்கு பராமரிப்பு ஆகியன நோக்கியா நிறுவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

நோக்கியா நிறுவனம் தமிழ்நாட்டில் தனது தொழிற்சாலையை நிறுவிட ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ஓர் இடத்தைத் தெரிவு செய்துள்ளது. நோக்கியா நிறுவனம் ஏற்படுத்த உள்ள முதன்மையான ஆலையைத் தவிர துணைப் பாகங்களின் உற்பத்தியாளர்களும் நோக்கியா தொழிற்சாலையை ஒட்டி தமது தொழில் பிரிவுகளைத் தொடங்குவர். நோக்கியா நிறுவனத்தின் முதல் கட்ட முதலீடு மதிப்பு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது 675 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். துணைப் பாகங்கள் உற்பத்தியாளர்களும் 150 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 675 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வர். இவ்வாறாக, முதல் கட்ட மொத்த முதலீடு 300 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 1,350 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். இதன் வாயிலாக, முதற்கட்டமாக சுமார் 1,200 பேர் நேரடி வேலைவாய்ப்பைப் பெறுவர். இதோடு மேலும் 6,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

ஸ்ரீ பெரும்புதூரில் நோக்கியா நிறுவனமும், சார்பு நிறுவனங்களும் தங்களது தொழிற் பிரிவுகளைத் தொடங்க உள்ள இடம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்படும். தொடக்கத்தில் 2 கோடியே 40 இலட்சம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்தத் தொழிற்சாலை அதிநவீன தொழிற்சாலையாக அமையும். இந்த உற்பத்தித் திறன் பின்னர் மேலும் விரிவுபடுத்தப்படும். இங்கு தயாரிக்கப்படும் செல்லிடத் தொலைபேசிகள் உள்நாட்டில் விற்பனை செய்யப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

இதுதொடர்பாக, நோக்கியா நிறுவனத்தின் உத்தேச முதலீடு தமிழக அரசு அளிக்கும் வசதிகள் மற்றும் ஆதரவுத் தொகுப்புதவி ஆகியவற்றை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் – Memorandum of Understanding ஒன்று நோக்கியா நிறுவனத்துடன் இன்று எனது முன்னிலையில் கையெழுத்து இடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் இயந்திரப் படகுகள், மோட்டார் மற்றும் இதரப் பொருள்களுக்கு முழு வரிவிலக்கு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 1.4.2005

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் கடற்கரையோரக் கிராமங்களை அண்மையில் சுனாமி அலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதில், தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்த இலட்சக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர மறுவாழ்வு பெற்றிட தமிழக அரசு ஒல்லும் வகையெல்லாம் உதவிகளைச் செய்து வருகிறது. இதுவரை, 902 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களை நான் அறிவித்துள்ளேன். வீடு இழந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் நிரந்தரமான, உறுதி வாய்ந்த வீட்டினைப் பெறும் வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகள் கட்டுமானக் கொள்கையினை இந்த அவையில் கடந்த 24.3.2005 அன்று நான் அறிவித்தேன் என்பதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூறுவர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவர்கள் மீது தனி அக்கறை கொண்டு அவர்களது குடும்பங்கள் சுனாமியின் பாதிப்பில் இருந்து மீண்டு, இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும், மீன்பிடித் தொழிலை தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் 461.34 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

முழுவதும் பாதிப்பு அடைந்த கட்டுமரத்துக்கு மாற்றாக, மரத்தினால் ஆன புதிய கட்டுமரம் வாங்க 32,000 ரூபாய் என்ற வரம்புக்கு உட்பட்டு அதன் மொத்த விலையும் மானியமாக வழங்கப்படுகிறது. உயர் அளவாக, 1.5 இலட்சம் ரூபாய் வரை விலை உள்ள முற்றிலுமாகச் சேதம் அடைந்த கண்ணாடி இழைக் கட்டுமரம் மற்றும் வள்ளங்களுக்குப் பதிலாக மாற்றுக் கலன்கள் வாங்கிடவும்; இழந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக கண்ணாடி இழைக் கட்டுமரங்கள் வாங்கிடவும்; 50 சதவிகிதம், அதாவது 75,000 ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.

முழுமையாகச் சேதம் அடைந்த அல்லது காணாமல் போன இயந்திரப் படகுகளுக்கு மாற்றாக புதிய இயந்திரப்



படகுகள் வாங்கிக் கொள்ள 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியம், படகு ஒன்றுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் என்ற அளவில் வழங்கப்படுகிறது.

அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாய் என்ற அளவில், பழுதுபட்ட இயந்திரப் படகுகளைச் செப்பனிட மதிப்பிடப்பட்ட சேதத்தில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது.

சுனாமிப் பேரழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை மீண்டும் பெற்றிட அரசு வழங்கும் மானிய உதவிகளைக் கொண்டு புதிய கட்டுமரம், வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் வாங்கி வருகின்றனர். மேலும், பல தொண்டு நிறுவனங்களும், அரசு சாரா அமைப்புகளும், தனியார் நிறுவனங்களும் இத்தகைய வாழ்வாதாரங்களை மீனவர்களுக்கு வாங்கி வழங்க முன்வந்துள்ளன. பாதிக்கப்பட்ட மீனவர்கள், இந்த வாழ்வாதாரங்களைத் திரும்பப் பெற்றிட முழுத் தொகையும் மானியமாகவே வழங்கப்பட வேண்டும் என்று மைய அரசை, எனது அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், மைய அரசோ மரக் கட்டுமரங்களை இழந்த மீனவர்களுக்கு மட்டுமே புதிய மரக்



கட்டுமரங்களை வாங்குவதற்கு முழு மானியமாக நிவாரண உதவி அனுமதித்துள்ளது. வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் ஆகியவற்றை இழந்தவர்களுக்கும்; மரக் கட்டுமரத்துக்குப் பதிலாக கண்ணாடி இழைக் கட்டுமரம் வாங்குவோருக்கும்; இயந்திரப் படகுகளைச் செப்பனிடவும்; மைய அரசு முழு மானியம் வழங்க இதுவரை முன் வரவில்லை.

இந்தச் சூழ்நிலையில், மீனவர்கள் மீன்பிடிக் கலன்களை வாங்குவதற்கும், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும், ஏற்படும் செலவைக் குறைக்கும் வகையில் முழு விற்பனை வரி விலக்கு அளிக்க நான் முடிவு செய்துள்ளேன். வள்ளம், அனைத்து வகை இயந்திரப் படகுகள், வெளிப் பொருத்தும் மோட்டார் மற்றும் மீன் பிடிப்பதற்குப் பயன்படும் இதர பொருட்கள் ஆகியவற்றுக்கு தற்போது 12 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பயன்பாட்டுக்காக இவை வாங்கப்படும் போது அவற்றுக்கு விற்பனை வரியில் இருந்து முழு விலக்கு அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், கட்டுமரம் செய்வதற்கான மரத்துக்கு தற்போது 10 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதற்கும் முழு வரி விலக்கு அளிக்க நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன். இந்த விற்பனை வரி விலக்கு நடப்பு நிதி ஆண்டு, அதாவது, 2005-2006ஆம் ஆண்டு முழுவதும் அமலில் இருக்கும்.

நான் தற்போது அறிவித்துள்ள இந்த விற்பனை வரிச் சலுகையின் காரணமாக, மீன்பிடிக் கலன்களின் விலை கணிசமான அளவில் குறையும்.

சுனாமியால் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்துவிட்ட மக்களுக்கு மீன்பிடிக் கலன்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்கு ஏதுவாக 2001ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வின் போது மைய அரசு வழங்கியவாறே தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் மைய அரசால் விதிக்கப்படும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே தமிழக அரசு மைய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. இந்த நிலையில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட விற்பனை வரிச் சலுகை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மைய அரசும், சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளித்து விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக மைய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

* * *

# அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் தமிழகம் முதலிடம்

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 6.4.2005**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனிதச் சமுதாயத்தை நாகரிகப்படுத்துவதும்; அறிவாற்றலைப் பெருக்கி சாதனைகள் புரிந்திட வல்லமை கொடுப்பதும் கல்வியே.

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி"

"எழுமையும் ஏமாப்பு உடைத்து கல்வி"

"கண் உடையார் என்பவர் கற்றோர்"

என்றெல்லாம் கல்வியையும் கல்வி கற்றோரையும் உயர்த்திப் புகழ்ந்து பாடுகிறார் திருவள்ளுவர். மக்களின் இதயங்களைப் பண்படுத்துவது கல்வி. அவர்கள் வாழ்க்கை முன்னேற்றம் பெற வழி வகுப்பது கல்வி. அதனால் தான் எனது அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த ஆண்டு, அதாவது 2005 – 2006ஆம் ஆண்டுக்கு பள்ளிக் கல்விக்காக 4,348.01 கோடி ரூபாயும், உயர் கல்விக்காக 741.77 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

மாணவ மாணவியர் உவகையுடன் கல்வி கற்கவும்; ஆசிரியர்கள் ஊக்கத்துடன் கல்வி கற்பிக்கவும்; பள்ளிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதன் அடிப்படையிலேயே அரசுப் பள்ளிகள் அனைத்திலும் போதுமான வகுப்பறைகள், குடிநீர் மற்றும் கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து தர எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 1 முதல் 8–ஆம் வகுப்புகளுக்கு 234 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 15,644 வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 10,526 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வகுப்பறைகள் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அரசுப் பள்ளிகள் அனைத்தும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமைப் பெற்றவையாக அமைந்திட வேண்டும் என்பதே எனது எண்ணம் ஆகும். இதன்படி, அரசுப் பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திட நபார்டு வங்கி கடன் உதவியுடன் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த 2002–ஆம் ஆண்டில் நான் ஆணையிட்டேன். கிராமப்புறங்களில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் முதலான அனைத்து அடிப்படை வசதிகளும் பெற்றிட இத்திட்டம் வழி வகுத்துள்ளது. இதன்படி மொத்தம் 182.74 கோடி ரூபாய் செலவில் மூன்று கட்டங்களில், 605 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அனுமதிக்கப்பட்டு, முதல் கட்டமாக

170 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு அவையாவும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. இரண்டாவது கட்டமாக, 136 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு அவற்றை கடந்த 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நான் திறந்து வைத்தேன். மூன்றாவது கட்டமாக,299 பள்ளிகளில் இப்பணிகள் மிகவும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவையாவும் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தற்போது 232.13 கோடி ரூபாய் செலவில் மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்; குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தருதல்; ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர எனது அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக நபார்டு வங்கியிடமிருந்து 184.90 கோடி ரூபாய் கடன் உதவி பெறப்படும். மாநில அரசு 47.23 கோடி ரூபாயை வழங்கும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் அறிவியல் கல்வியை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். சோதனை செயல்முறைகள் மூலம் அறிவியல் கோட்பாடுகளை மாணவ – மாணவியர் நன்கு புரிந்து கொண்டு அறிவியல் கல்வியை ஊக்கமுடன் கற்க பள்ளிகளில் முழுமையான வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்கள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும். தற்போது தமிழகத்தில் மொத்தம் உள்ள 3,539 அரசு உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில்,840 பள்ளிகளில் ஆய்வுக் கூட வசதிகள் இல்லை. இந்த 840 பள்ளிகளிலும் தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்களை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

அதன் அடிப்படையில்,71.03 கோடி ரூபாய் செலவில் இந்த ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும். இந்தச் செலவு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் உபரி நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதன் மூலம் ஆய்வுக் கூட வசதி அற்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளோ அல்லது அரசு மேல்நிலைப் பள்ளிகளோ தமிழகத்தில் இல்லை என்ற நிலை உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் இந்தியா விலேயே முதல் இடத்தை தமிழகம் பெற்றுள்ளது என்று உலக வங்கியே சான்று அளித்துள்ளது என்ற மகிழ்ச்சியான தகவலை இந்த நேரத்தில் இந்த அவையில் மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

* வசிப்பிடங்களில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் அரசின் தொடக்கப் பள்ளிகள் அமைந்திருத்தல்;
* அரசு தொடக்கப் பள்ளிகளுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்புகின்ற குடும்பங்களின் விகிதாச்சாரம்;
* பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் செயல்பாடுகள் குறித்தும், பள்ளிகளில் காணப்படும் வசதிகளின் தரம் குறித்தும் பெற்றோர் மற்றும் மாணவ மாணவியரின் மன நிறைவு;

– போன்ற குறியீடுகளை அளவுகோல்களாகக் கொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் அரசுப் பள்ளிக் கல்விப் பணிச் செயல்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மேற்சொன்ன அனைத்து வகைகளிலும் திறம்படச் செயல்பட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று இந்தியாவில் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை எய்துதல் – Attaining the Millennium Development Goals in India என்ற உலக வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இதே போன்று உயர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அரசு உறுப்புக் கல்லூரிகளிலும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் தற்போது காலியாக உள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்ப நான் முடிவு எடுத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு உறுப்புக் கல்லூரிகளில் முதற்கட்டமாக, 500 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்படும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் இளநிலை விரிவுரையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இவர்களுக்கு முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இதே போன்று தமிழகத்தில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் காலிப் பணியிடங்களை படிப்படியாக நிரப்பிடவும், முதல் கட்டமாக, 300 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்பிடவும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியும், உயர் கல்வியும் மேலும் உயர்ந்திட உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

* * *

# வணிகவரி வருவாய் வளர்ச்சி விகிதம் உயர்வு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 5.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் வணிகவரிகள் துறை மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தேவையான நிதியைப் பெரும் அளவில் ஈட்டித் தருகின்ற துறை ஆகும். அரசின் வரி வருவாயில் 68 சதவிகிதம் வணிக வரிகள் மூலமாகவே கிடைக்கப் பெறுகிறது.

2001ஆம் ஆண்டில் நான் மீண்டும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி இருந்ததையும்; வணிகவரி வருவாய் வளர்ச்சி விகிதத்தில் தொய்வு ஏற்பட்டு இருந்ததையும்; அதனைச் சரிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டதையும்; இந்த அவையின் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் பயனாக வரி வருவாய் வளர்ச்சி விகிதம் சிறப்பாக உயர்ந்துள்ளது. 2001ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது வணிகவரி வருவாய் 8,664 கோடி ரூபாயாக இருந்தது. இது கணிசமாக உயர்ந்து 2003–2004ஆம் ஆண்டில் 11,757 கோடி ரூபாய் என்ற அளவை எட்டியது. 2004–2005ஆம் ஆண்டில் வணிகவரி வருவாய் மேலும் அதிகரித்து, 13,907 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். 2003–2004ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2004–2005ஆம் ஆண்டின் வணிகவரி வளர்ச்சி 18.29 சதவிகிதம் ஆகும். கடந்த நான்கு ஆண்டுகளில் வணிக வரி வருவாய் வளர்ச்சியின் ஒட்டு மொத்த உயர்வு 60.51 சதவிகிதம் ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2005–2006ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எந்த வரியும் விதிக்காத – Tax Free Budget – வரி அற்ற நிதி நிலை அறிக்கையை எனது அரசு வழங்கி உள்ள போதும் இத்தகைய வரி வருவாய் உயர்வு எட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் எனது அரசு 175 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகளை வழங்கி உள்ளது. இதில் மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மீதான விற்பனை வரியை சென்ற ஆண்டு ரத்து செய்ததில் மட்டும் 51 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இதுவரை வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மதிப்பை நடப்பு நிதி ஆண்டு முடிய கணக்கிட்டால் அதன் ஒட்டு மொத்த மதிப்பு 460 கோடி ரூபாய் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி வருவாயில் எவ்வித இழப்பும் ஏற்படாமல் இருக்க வேண்டும் எனில் வரி ஏய்ப்பு தடுக்கப்பட வேண்டும். எனவே வரி விதிப்புக்கு இலக்காகும் பொருட்கள் உரிய வரி செலுத்தப்படாமல் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதும் மாநிலத்திற்கு உள்ளே கொண்டு வரப்படுவதும் கண்காணிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக பிற துறைகளுடன் இணைந்து வாகனங்களை சோதனை செய்யும் வகையில் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைப்பது குறித்து ஆய்வு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

அரசின் வரி வருவாயில் 68 சதவிகிதத்தை தனது பங்காக வழங்குகின்ற வணிகவரித் துறையின் நிருவாகத்தை நவீனப்படுத்தவும் மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. வரி வசூல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளை விரைவாகவும் செம்மையாகவும் செய்து முடித்திட துறை

முழுமையாக கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. துறையின் அனைத்து வரி விதிப்பு வட்டங்கள் நிருவாக அலுவலகங்கள் மற்றும் வணிகவரி சோதனைச் சாவடிகள் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு ஆணையர் அலுவலகத்துடன் தகவல் தொடர்பு பரிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகளுக்காக 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வணிகவரிகள் துறையின் தலைமை அலுவலகம் தற்போது சேப்பாக்கத்தில் உள்ள எழிலக வளாகத்தில் அமைந்துள்ளது. முழுவதும் கணினிமயம் ஆக்கப்பட்ட இவ்வலுவலகத்தில் 400 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கு என தனியான பயிற்சி நிலையம் ஒன்றும் இத்துறையில் செயல்பட்டு வருகிறது. இவை அனைத்திற்கும் எழிலக வளாகத்தில் உள்ள தற்போதைய அலுவலகத்தில் போதிய இட வசதி இல்லை. இதனால் அலுவலர்களும் பணியாளர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் கணினி மையமும் பயிற்சி நிலையமும் ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமையாமல் தனிக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.


வணிக வரித்துறை ஆணையர் அலுவலகத்திற்குத் தேவைப்படுகின்ற போதிய இடவசதி; அங்கு பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் கணினி மையம், பயிற்சி நிலையம் ஆகியவை ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமைய வேண்டிய தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இதற்கென ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கான அனுமதி அளிக்க நான் முடிவெடுத்துள்ளேன்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் தற்போது வணிக வரி நிருவாக அலுவலகங்கள் செயல்படுகின்ற கட்டடத்திற்கு அருகில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 0.56 ஏக்கர் காலி நிலத்தில் இந்தப் புதிய கட்டடத்தை உருவாக்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த இடத்தில் 4,224 சதுர மீட்டர் பரப்பளவில் அனைத்து வசதிகளுடன் கூடிய 5 அடுக்கு கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும். வணிக வரித் துறை ஆணையர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான இட வசதியுடன் இந்தப் புதிய கட்டடம் அமையும். மாநாட்டுக் கூடம், கணினி மையம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவையும் இக்கட்டடத்திலேயே இடம் பெறும். 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் இந்தப் புதிய கட்டடம் கட்டப்படும்.

இதன் மூலம் வணிகவரித் துறை ஆணையர் அலுவலக அலுவலர்களும், பணியாளர்களும் தங்களது பணிகளை மேலும் சிறப்புடன் மேற்கொள்ள ஏதுவாகும் என்பதை தெரிவித்து அமைகிறேன். □

## கோழி



சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காட்டுக் கோழிகள் பெருமளவில் வாழ்ந்து வந்தன. இவற்றைப் பழக்கி வீடுகளில் வளர்க்க மக்கள் கற்றுக் கொண்டனர். பின்னர், இங்கிருந்து பிற ஆசிய நாடுகளுக்கும் அரபு நாடுகளுக்கும் கோழிகள் கொண்டு செல்லப்பட்டன. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் தான் அரேபியாவிலிருந்து கோழி ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றது. இன்று உலகெங்கும் வீடுகளில் வளர்க்கப்படும் முக்கியமான பறவை இனமாக கோழி இருக்கிறது.

பிற பறவைகளைப் போலவே கோழி சிறு தானியங்கள், பழங்கள், குருத்து, புழு, பூச்சிகளை கொத்தி விழுங்கும். கோழிக்குப் பற்கள் கிடையாது. ஆனால் உறுதியான அலகு உண்டு. இது உண்ணும் உணவை இதன் உடல் வேகமாகச் செரிமானம் செய்து கொள்ளும். கோழி உறங்கும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் இரை தேடி அலையும். இது பல்வேறு தட்பவெப்ப நிலையிலும் வாழக்கூடிய பறவையாகும். எனவேதான் உலகம் முழுவதும் காணப்படுகிறது.

இந்தியக் கோழி சாதாரணமாக ஓராண்டில் 50 முட்டைகளே இடுகின்றது. ஆனால் மேல்நாட்டைச் சேர்ந்த வெள்ளை லெக்ஹார்ன், கறுப்பு மினார்க்கா, ரோடு ஐலண்டு சிவப்பு வகை போன்ற கோழி வகைகள் ஆண்டு ஒன்றுக்கு 250 முட்டைகள் வரை இடுகின்றன. ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
'மீலாதுன் நபி' வாழ்த்துச் செய்தி

**பெ**ருமானார் முகமது நபி அவர்கள் பிறந்த திருநாள் உலகெங்கும் உவப்புடன் கொண்டாடப்படும் இந்த உன்னத வேளையில், என் அன்பிற்கினிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த 'மீலாதுன் நபி' வாழ்த்துகளை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்குர்ஆன் தெரிவிப்பது போல் அகில உலகத்தவர்க்கும், ஓர் அருட்கொடையாக அனுப்பப்பட்டவர், அண்ணல் முகமது அவர்கள். உலகம் எங்கும் இறைவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதர்கள் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் பேர் என்பார்கள். அவர்களில் இறுதித் தூதராக வந்தவர் நபிகள் நாயகமாம் பெருமானார் முகமது நபி அவர்கள். அதனால் தான் மனிதகுலம் முழுமைக்கும் பொதுவான வேதம் அவர் வாயிலாக அருளப்பட்டது.



நபிகள் நாயகம் அவர்கள் போதித்த சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவமும் இன்றைய உலகின் இன்றியமையாத தேவைகள்.

எனவே, சாந்தி தழைக்கவும், சமாதானம் ஓங்கவும், சகோதரத்துவம் வளரவும் உழைப்போம்.

அமைதிப் பூங்காவாம் தமிழகத்தில் வாழும் அனைத்து இஸ்லாமியச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் மீண்டும் ஒருமுறை 'மீலாதுன் நபி' வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
'மகாவீர் ஜெயந்தி' வாழ்த்துச் செய்தி

**ப**கவான் மகாவீர் பிறந்த திருநாளை மகிழ்வுடன் கொண்டாடும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அறத்தின் சமயம் சமணம். அறத்தின் நாயகர் பகவான் மகாவீரர்! அறத்தின் அடிப்படை கொல்லாமை ஆகையால், அகிம்சை நெறியே அகிலத்தின் அறநெறியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மண்ணை வெல்வது மகாவீரம் இல்லை. தன்னை வெல்வதே மகா வீரம்! பகவான் மகாவீரர் தன்னை வென்றவர். ஆகவே அவர் மகாவீரர்!

பகவான் மகாவீரர் வழியில் மானுடம் அகிம்சையைக் கடைப்பிடித்தால் வன்முறையின் கோரப்பிடியில் இருந்து இந்த உலகம் விடுதலை பெறும்.

மனிதகுலத்துக்கு மாமருந்தாய் விளங்கும் மகத்தான போதனைகளை வழங்கிய பகவான் மகாவீரர் பிறந்த திருநாள் கொண்டாடப்படும் இந்த மங்கல வேளையில், அவருடைய தத்துவங்களைப் பின்பற்றும் அனைவருக்கும் என் இனிய வாழ்த்துகள்!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் 'அன்னதானத் திட்ட'த்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.



அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குரிய தனது சம்பளத் தொகை 10,000 ரூபாயை, சென்னை, திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. சி. லட்சுமணன் அவர்களிடம் 31.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள். □

# கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் தொகுப்பு வீடுகள் செப்பனிடப்படும்




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110–ன்** கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 7.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள கிராமங்கள் யாவும் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும்; கிராம மக்கள் யாவரும் பொருளாதார மேம்பாடு அடைந்து வளமான வாழ்க்கையைப் பெற வேண்டும் என்பது என்னுடைய அரசின் குறிக்கோள் ஆகும். இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில் எனது அரசு முனைப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சாலை மேம்பாடு, சிறு பாலங்கள், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், உரக் குழிகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கிராமச் சந்தைகளை மேம்படுத்துதல், மீன் உலர் களங்கள் அமைத்தல், சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது.

இதே போன்று, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் அதிகாரம் அளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம் – Empowerment and Poverty Reduction Programme – என்ற திட்டத்தை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. மேலும், சுயஉதவிக் குழுக்களின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தொகுப்பு வீடுகள் அரசால் கட்டித் தரப்படுகின்றன. 2004–2005ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 154.31 கோடி ரூபாய் செலவில் 37,676 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன. தொகுப்பு வீடுகள் கட்டும் பணி மிக விரைவாக தமிழகத்தில் செயல் படுத்தப்பட்ட காரணத்தால் மைய அரசு முதலில் ஒதுக்கீடு செய்த 90 கோடி ரூபாயுடன் கூடுதலாக, 8.95 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது.



1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட



தொகுப்பு வீடுகளில் பெரும்பாலானவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றைச் செப்பனிட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொகுப்பு வீடுகளின் பராமரிப்புப் பணிகளை பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும் என்றாலும், பயனாளிகளின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நான் தற்போது வழிவகை செய்துள்ளேன்.

இதன்படி, 1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகள் அனைத்தும் செப்பனிடப்படும். இப்பணிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் 10,000 ரூபாய்க்கு மேற்படாத செலவு மதிப்பீட்டில் பயனாளிகள் மூலம் மேற்கொள்ளப்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 82 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக 2005–2006ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியை எவ்வகையில் பகிர்ந்து அளித்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளன. தற்போது நான் அறிவித்துள்ள தொகுப்பு வீடுகள் செப்பனிடும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கம் செய்யும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியை பகிர்ந்து அளித்து பயன்படுத்தும் முறையை திருத்தி அமைக்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. இதன்படி, குடிநீர்ப் பணிகளுக்காக 5 இலட்சம் ரூபாய், நமது கிராமத் திட்டத்துக்காக 10 இலட்சம் ரூபாய்; மாணவர் இல்லங்கள் கட்ட 5 இலட்சம் ரூபாய்; கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க 10 இலட்சம் ரூபாய்; தெரு விளக்குகள் அமைக்க 5 இலட்சம் ரூபாய்; தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய், இதரப் பணிகளுக்கு – Untied outlay – 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியைப் பகிர்ந்து அளித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்கள், இதரப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து இந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்து கொள்ளலாம்.

தற்போது நான் அறிவித்துள்ள திட்டத்தின் வாயிலாக 1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் வசிக்கும் 1,02,659 குடும்பங்கள் பயன் பெறுவர் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக தீயணைப்பு ஊர்திகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக 26 நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை வழங்கினார்கள்.

முழுவதும் முடிக்கப்பட்ட 26 நீர்தாங்கி ஊர்திகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக 14.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

அப்போது, இந்த ஊர்திகளை நல்ல முறையில் பராமரித்து பயன்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓட்டுநர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். இப்போது, முதல் கட்டமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த 26 தீயணைப்பு ஊர்திகள்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை பல்வேறு வகையிலும் நவீனபடுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில், துறையில் உள்ள பழைய நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை மாற்றி, புதிய நவீன நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை வாங்கிட உத்தரவிட்டார்கள். முதல் கட்டமாக 11.01 கோடி ரூபாய் மதிப்பில் 84 நீர்த்தாங்கி தீயணைப்பு ஊர்திகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 66 ஊர்திகள் வாங்கப்பட்டு, அந்த ஊர்திகளில் "நீர்தாங்கி கட்டுமானப்பணிகளை" அமைப்பதற்காக அவை தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகத்திடம் (கோயம்புத்தூர்) ஒப்படைக்கப்பட்டது. அரசு போக்குவரத்துக் கழகத்தின் பணி சென்னை மாநகரத்தின் தீயணைப்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஏ.எக்ஸ். அலெக்சாண்டர் இ.கா.ப., தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு. எஸ்.கே. டோக்ரா இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை

– 7.4.2005



# ஊராட்சிகளில் பணிபுரியும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள ஊரகப் பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்கு என்னுடைய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. கிராம அளவில் அடிப்படை வசதிகளை வழங்கி, அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த எனது அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிராம ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவு ஆகிய பணிகள் கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளாகும். இந்தப் பணிகள் அனைத்தும் 12,026 முழு நேர மற்றும் பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள்; 39,152 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள்; மற்றும் 11,653 துப்புரவுப் பணியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான ஊதியத்தை கிராம ஊராட்சி வழங்குகிறது. கிராம மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதில் முக்கியப் பங்காற்றும் மேற்சொன்ன பணியாளர்கள் யாவரும் அடித்தட்டுப் பணியாளர்கள் ஆவர். மக்களுக்குச் சேவை செய்யும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு நிறைவான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது என் எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில் தான், அண்மையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு நான் ஊதிய உயர்வு வழங்கினேன். அதே அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப் படும் தொகுப்பு ஊதியத்தை உயர்த்தி வழங்க நான் தற்போது முடிவு செய்துள்ளேன்.

இதன்படி, ஊராட்சி முழு நேர எழுத்தர், பகுதி நேர எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பு ஊதியம் இனி மாதம் ஒன்றுக்கு, 200 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும். அதாவது,

★ ஊராட்சி முழு நேர எழுத்தர்கள் தற்போது பெற்று வரும் 1,800 ரூபாய் தொகுப்பு ஊதியம் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள் தற்போது பெற்று வரும் 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும்; மேலும் கூடுதலாக இயக்கப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒவ்வொன்றுக்கும் தற்போது

150 ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது. இது 250 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்த ஊதிய உயர்வினால் கிராம ஊராட்சிகளின் 62,831 அடித்தட்டுப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊதிய உயர்வு 1.4.2005 முதல் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 16.24 கோடி ரூபாய் ஆகும்.

கிராமப்புற மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் முதலான பணிகளை மேற்கொண்டு வரும் கிராம ஊராட்சிகளின் அடித்தட்டுப் பணியாளர்கள், மேலும் ஊக்கம் பெற்று உற்சாகத்துடன் பணிபுரிய இந்த ஊதிய உயர்வு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

## அரசு நிறுவனம் மூலமாக அயல்நாட்டு வேலை



சென்னையில் இயங்கிவரும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம் ஆகும். கடந்த 25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு அயல்நாடுகளில் பாதுகாப்பான வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதில் இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தற்போது, இந்நிறுவனத்தின் மூலம் சவூதி அரேபியா, சுகாதாரத் துறையின் அரசு மருத்துவ நிலையங்களுக்கு அனுபவம் பெற்ற பொது மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோரைத் தேர்வு செய்துள்ளது. சவூதி அரேபியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை பாடப் பிரிவுகளுக்கு உதவிப் பேராசிரியர்களை அனுப்பவுள்ளது. எம்.டி., எம்.எஸ்., எம்.சி.எச்., எம்.டி.எஸ். ஆகிய பட்ட மேற்படிப்புடன் மூன்றாண்டுகளுக்கும் மேலாக அனுபவமுள்ள நிபுணர்களையும் தேர்வு செய்யவுள்ளது.

மலேசியாவில் பணிபுரிந்த அனுபவம் பெற்ற நர்சுகள், பாராமெடிக்கல் டெக்னீசியன்கள் இந்நிறுவனம் மூலமாக மீண்டும் மலேசியாவில் வேலைவாய்ப்புப் பெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள நிறுவனத்திற்கு மெக்கானிக்கல் போர்மென், எலக்ட்ரிக்கல் போர்மென் பதவிகளுக்கு பத்து ஆண்டுகளுக்கும் மேலாக டீசல் பவர் ஸ்டேசனில் அனுபவம் உள்ள பட்டய இன்ஜினியர்களைத் தேர்வு செய்யவுள்ளது. மேலும், பவர் ஸ்டேசனில் 5 வருடம் பணிபுரிந்த அனுபவமுள்ள ஐ.டி.ஐ. பம்பு மெக்கானிக் பிட்டர்கள் மற்றும் ஐ.டி.ஐ. டீசல் மெக்கானிக் பிட்டர்கள் ஆகிய பணிகளுக்கும் உடனடியாக அனுப்ப உள்ளது.

ஐரோப்பிய மாடல் வாகனப் பராமரிப்பில் அனுபவம் பெற்ற டீசல் மெக்கானிக்குகளையும் இன்ஜினியர்களையும் துபாயில் உள்ள நிறுவனத்திற்காக தேர்வு செய்யவுள்ளது.

தொழில் அனுபவம் வாய்ந்த ஹெவி ட்ரக்கு மெக்கானிக்குகள், விவசாயப் பண்ணை இயந்திர மெக்கானிக்குகளையும், ஏர் கன்டிசன் டெக்னீசியன்களையும் ஆஸ்திரேலிய நாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.), ஜி.எஸ்.எம்., மைக்ரோவேவ், சாட்டிலைட் மற்றும் பிற தகவல் தொடர்ப்புப்பிரிவு இன்ஜினியர்களையும் டெல்லியிலுள்ள இந்திய அரசு நிறுவனமான டெலிகம்யூனிகேசன்ஸ் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தின் அயல்நாட்டுத் திட்டப் பணிகளுக்கு அனுப்பி வருகிறது.

அயல்நாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெற விரும்புவோர் தமிழக அரசு நிறுவனமான ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தை தங்களின் கல்வித்தகுதி மற்றும் பணி அனுபவம் போன்ற விவரங்களுடன் உடனடியாக அணுகலாம்.

**ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேசன்**
"41, மெக்னிக்கல்ஸ் சாலை,
சேத்துபட்டு, சென்னை–600 031.
தொ.பே. எண்.
**28365099/28365188/28365014**
மின் அஞ்சல் முகவரி : omc@md4.vsnl.net.in
இணைய தள முகவரி :
www.omcmanpower.com"



# தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா

இந்திய விடுதலை வேள்வியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வீரர்களில் போற்றத்தக்கவர் தியாகி திருப்பூர் குமரன் ஆவார். வீட்டிற்காக வாழாமல் நாட்டிற்காக வாழ்ந்து, தனது இன்னுயிரைத் துறந்த தியாகத்தின் திருவடிவம் தான் திருப்பூர் குமரன். திருப்பூர் குமரனின் தன்னிகரற்ற தியாகத்திற்குப் பெருமை சேர்த்து, திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, 150 சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி. இராமசாமி அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில், "இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட



தியாகிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் விழா எடுத்து வருகிறார்கள். அதனடிப்படையிலேதான் இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நாயகன் தீரன் சின்னமலை அவர்களுக்கு கடந்த ஆண்டு அரசின் சார்பில் விழா எடுக்க உத்தரவிட்டு, அவரின் நினைவாக ரூ.30 இலட்சம் மதிப்பில் மணி மண்டபம் கட்டவும், ரூ.20 இலட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கும் ஆணைப்பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின்

அவரது புகழுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் அவரது நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் சிறப்புடன் நடத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க மிகச் சிறப்பாக விழா நடத்தப்பட்டது.

தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் 12.2.2005 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். இவ்விழாவில் தியாகி திருப்பூர் குமரன்




சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தியாகிகளுக்கு ஒய்வூதியம் வழங்கியும், மேலும் பல்வேறு சலுகைகள் அளித்தும் இந்த அரசு கௌரவித்து வருகிறது. திருப்பூர் குமரன் அவர்கள் உருவம் பொறித்த தபால்தலை வெளியிட நடவடிக்கை எடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நாட்டின் விடுதலைக்காக எத்தனையோ தலைவர்கள் பாடுபட்டாலும், தியாகி திருப்பூர் குமரன் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்'' என்று தெரிவித்தார்.

தியாகி திருப்பூர் குமரன் வாரிசுதாரர்களை கௌரவித்து, திருப்பூர் குமரன் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, விழா மலரை வெளியிட்ட மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தமது உரையில், “நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்ற வேண்டும். தன்னலம் மறந்து, மக்கள் நலனுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்களை வாழ்த்தி வணங்க வேண்டும். அவர்களின் பெருமைகள் நிலைபெறும் வகையில் நினைவாலயம் உருவாக்க வேண்டுமென்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் கொடிகாத்த குமரன் என்று போற்றப்படும் சுதந்திரப் போராட்டத் தியாகி திருப்பூர் குமரனின் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறுவது பெருமைக்குரியதாகும். விடுதலைப் போராட்ட வேள்வியில் குதித்து, தியாகம் புரிந்து, சமூக சீர்திருத்தச் சிற்பியாக உருவாகி தன் வாழ்நாள் முழுவதும் இச்சமுதாயத்திற்காக உழைத்த தந்தை பெரியார் பிறந்த இம்மண்ணில் நடைபெறும் எழுச்சி மிகுந்த இவ்விழாவில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மக்கள் உரிமை வாழ்வு பெறவேண்டும், நமது நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக சிறைச்சாலையில் சித்திரவதைக்கு ஆளானவர்கள், சொத்து, சுகங்களை இழந்தவர்கள், அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் போராடி இன்னுயிரை மாய்த்துக் கொண்டவர்கள், ஆயுள் தண்டனை பெற்றவர்கள், சிறையிலே செக்கிழுத்தவர்கள் என தியாகிகளில் ஒருவராக தாயின் மணிக்கொடி காக்க தன்னுயிர் ஈந்த மாமனிதராகப் போற்றப்படுவர் திருப்பூர் குமரன். தான் மடிந்தாலும், தடிஅடி தன் உடலின் மீது விழுந்தாலும், தாய்நாட்டின் பெருமை போற்றும் தேசியக் கொடி தரையில் விழக்கூடாது என்று போராடிய தன்மான வீரர் திருப்பூர் குமரன் ஆவார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு விழாக்கள் எடுக்கும் அதேவேளையில், அவர்களின் எண்ணக் கனவுகள் ஈடேறவும் பாடுபட்டு வருகிறார். தலைவர்கள், நாட்டிற்காகப்



ஆட்சி நடத்திவரும் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக தமிழ்நாட்டில் உரிமைக்காக கொடுக்க வேண்டியதைக் கொடுக்கின்ற முதலமைச்சர் அவர்களின் வழிநடக்க உறுதி ஏற்போம்" – எனப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள் தமது உரையில், – "சுதந்திரம் பெற்ற போது நம்மவர்கள் அடைந்த துன்பம் பற்றி இந்த தலைமுறையினருக்குத் தெரியாது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் விடுதலைபெற வேண்டும் என்பதற்காக கத்தியின்றி, ரத்தமின்றி அறவழியில் போராடினார்கள். இன்னுயிரையும், உடைமைகளையும் இழந்துள்ளவர்கள் குறித்து தற்போது வரலாறு மட்டுமே இருக்கிறது. ஆனால் இளைய தலைமுறையினருக்கு விடுதலைப் போராட்ட தியாகிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் தியாகி திருப்பூர் குமரனின் நூற்றாண்டு விழா கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நாட்டுக் கொடியைக் காப்பதற்காகவே தன்னுயிரை ஈந்தவர், உலக வரலாற்றிலேயே திருப்பூர் குமரன் ஒருவர்தான். அவர் சாதாரண நெசவாளர் குடும்பத்தில் பிறந்தாலும், அவரது தியாகத்தால் தமிழ்நாட்டிற்கும், அவர் பிறந்த இந்த ஈரோடு மாவட்டத்திற்கும் பெருமை என்று சொன்னால் அது மிகையாகாது" என்று குறிப்பிட்டார்.

பாடுபட்ட பெருமக்கள் ஆகியோரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் தருகின்ற ஒரே தலைவியாக, ஒப்பற்ற ஆட்சியாளராக, நிருவாகத் திறமையுள்ள முதலமைச்சராகத் திகழ்ந்து கொண்டு வருகிறார். தமிழ்நாட்டை வளம் பெறச் செய்து, எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெறச்செய்து, இந்தியாவிற்கே வழி காட்டும் முதலமைச்சராக அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். நெருக்கடி நிறைந்த நிலையிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ தொடர் போராட்டங்களை சந்தித்ததோடு, இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட இன்னல்கள், சுனாமியால் பாதிப்பு ஏற்பட்டாலும் எதற்கும் சிறிதும் அஞ்சாமல் தமிழ்நாட்டு மக்களை வாழவைக்க வேண்டும்; தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் கவனம் செலுத்திப் பணியாற்றி வருபவர் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள் என்று அனைத்து தரப்பு மக்களின் நலன் காக்கும் அரசாக அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரை வளர்ச்சித் துறையின் மூலம் ரூ.63 கோடி செலவில் 8,454 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் காசிபாளையம், பெரிய சேமூர், புஞ்சை புளியம்பட்டி, சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், வெள்ளக் கோவில் ஆகிய 6 சிற்றூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகளாக ஆக்கிய பெருமை அம்மா அவர்களைச் சாரும். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் சீர்மிகு





இவ்விழாவில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத் தலைவர் சிந்து ரவிச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ். தென்னரசு, திரு. கே.சி. கருப்பண்ணன், திரு. பி. சிதம்பரம், திரு. எஸ்.எஸ். ரமணீதரன், திருமதி. செல்வி முருகேசன், திரு. கே.எஸ். பழனிச்சாமி மற்றும் தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்கள், வாரிசுதாரர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திருமதி. இரா. கெஜலட்சுமி வரவேற்றார்.

மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வரும் தமிழக அரசு, தியாகி திருப்பூர் குமரன் அவர்களுக்கு இந்தச் சிறப்புமிகு விழாவை எடுத்துச் அவரைப் பெற்றெடுத்த இம்மாவட்ட மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையில் விழா எடுத்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் இம்மாவட்ட மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

**– எம்.ஆர். லிங்கம்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

## சணல்

ஒருவகைத் தாவரத்திலிருந்து எடுக்கப்படும் நார்தான் சணல். சணல் செடி சுமார் மூன்று மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. நன்கு வளர்ந்த செடிகளை அறுவடை செய்து ஓரிடத்தில் அடுக்கி வைப்பார்கள். இவை காயும் போது இலைகள் யாவும் உதிர்ந்துவிடும். பிறகு இவற்றை ஒழுங்குப்படுத்தி சுமைகளாகக் கட்டி தண்ணீரில் ஊறவைப்பார்கள். அவை நன்கு ஊறிய பிறகு தண்டிலிருந்து நாரை உரிப்பார்கள். இவ்விதம் எடுக்கப்பட்ட நார் உலர்ந்த பின் சணல் எனப்படுகிறது.

சணலை இயந்திரங்களில் துணி நெய்வதைப்போல நெய்கிறார்கள். நெய்த துணியால் செய்த பெரிய பைதான் கோணிப்பை அல்லது சாக்குப்பை ஆகும். சணல் துணிகள் தரை விரிப்புகளாகவும், சித்திரவேலைப்பாடமைந்த துணிகளாகவும் பலவகைகளில் பயன்படுகின்றன. திரித்த சணல் கயிறும் பல வழிகளில் பயனாகிறது. மிக மெல்லிய சணல் இழைகளைக் கொண்டு ஒருவகை செயற்கைப்பட்டு தயாரிக்கப்படுகிறது.

உலகில் உற்பத்தியாகும் சணலில் பெரும்பகுதி இந்தியாவிலும், பங்களாதேசிலும் பயிராகிறது.





# திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் பூங்கா




திருநெல்வேலி மாவட்டத்தை முழு சுகாதாரம் பெற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு, முழு சுகாதார இயக்கம் 2002–2003 முதல் ரூ.907.72 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் திறந்த வெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கான தேவையை ஏற்படுத்துவதும் இதன் மூலம் இல்லக் கழிப்பறைகளை அமைத்து மனிதக் கழிவை பாதுகாப்பாக அகற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும்.




அதனைக் கருத்தில்கொண்டு பல்வேறு கல்வி, தகவல் தொடர்புப் பணிகள், தெருமுனை நாடகங்கள், பிரச்சார இயக்கங்கள், சுவர் விளம்பரங்கள், பயிற்சிகள், ஊர்வலங்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக சுகாதாரம் பற்றிய செய்தி மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் இல்லங்களில் கழிப்பறையின் தேவையை உணர்ந்து கழிப்பறை கட்ட முன் வந்துள்ளார்கள்.

கழிப்பறைகளின் அமைப்பு, அவைகளின் செயல்பாடுகள், குறைந்த செலவிலான தொழில் நுட்பத்துடன் எவ்வாறு அமைப்பது போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில்



மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுகாதாரப் பூங்கா ஒன்று ரூ.2.3 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் நாள்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு வரும் பொதுமக்கள் கழிப்பறைகளின் மாதிரிகளை நேரில் பார்வையிடவும், அவற்றை கட்ட பயன்படும் பொருட்களின் அளவு, அவற்றின் விலை மதிப்பு போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் இயலும். இப்பூங்காவில் செலவே இல்லாத கழிப்பறை, குறைந்த செலவு கழிப்பறை, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற கழிப்பறை, நேரடிகுழி கழிப்பறை, பத்மனாபபுரம் அரண்மனையில் பயன்படுத்திய கழிப்பறை, உடல் ஊனமுற்றோர்க்கான கழிப்பறை, பள்ளி கழிப்பறை, அங்கன்வாடி கழிப்பறை, கழிப்பறை கோப்பை மாதிரிகள், பல்வேறு அமைப்பிலான கழிப்பறை, உறிஞ்சு குழாய்கள் மற்றும் செங்கல் சுவர் கழிப்பறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவிற்கு வரும் மக்களுக்கு தேவையான விளக்கங்களும் இங்கு அளிக்கப்படுகிறது.

முழு சுகாதார இயக்கம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட பின்னர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களில் சுமார் 40,000 இல்லங்களிலும், வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மக்களில் 60,000 இல்லங்களிலும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைக்கப்பட்டு, மொத்த கிராமப்புற இல்லங்களில் 32 சதவிகிதம் கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளன. மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கழிப்பறை, குளியலறை, எரியூட்டிகள் (Incinerator), காய்கறி தோட்டம் ஆகிய வசதிகளுடன் மகளிர் சுகாதார வளாகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், 291 பள்ளி கழிப்பறைகள், 641 அங்கன்வாடி கழிப்பறைகள் கட்டப்பட்டு தண்ணீர் வசதி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர் விழிப்புணர்வு மூலம் சுயஉதவிக் குழுக்கள் நாட்டு நலப்பணித் திட்டம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி முழு சுகாதார மாவட்டமாக உருவாக்கிட முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

தனி நபர் இல்லக் கழிப்பறைகளை அமைக்க விரும்பும் மக்கள் தங்கள் வசதிக்கேற்ப சிக்கனமாக மாதிரிகளைத் தேர்வு செய்து, அவற்றைத் தங்கள் இல்லங்களில் அமைத்துப் பயன்படுத்திட இங்கு அமைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பூங்கா ஒரு சிறந்த தகவல் கல்வி தொடர்பு சாதனமாகப் பயன்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**– உல .இரவீந்திரன்**

***செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்***

***திருநெல்வேலி***

* * *

## மனிதனின் எடை

60 கிலோ எடை உள்ள மனிதனின் எடை மற்ற கிரகத்தில் பின்வருமாறு இருக்கும் :

| | |
|---|---|
| செவ்வாய் | 22.8 கிலோ |
| புதன் | 21.6 கிலோ |
| வியாழன் | 159.0 கிலோ |
| வெள்ளி | 51.6 கிலோ |
| சனி | 68.4 கிலோ |
| சந்திரன் | 0.987 கிலோ |
| யுரேனஸ் | 57.6 கிலோ |
| நெப்டியூன் | 60.0 கிலோ |






# விவசாயிகளின் பயிர்க்கடன் வட்டி தள்ளுபடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 13.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் வளத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கை நலத்திற்கும் அடிப்படையாக வேளாண் தொழில் அமைந்துள்ளது. வாழுகின்ற மனிதருக்கெல்லாம் உணவு அளித்து உயிர் அளிக்கும் வேளாண் தொழிலை வெல்லும் தொழில் வேறு எதுவும் இல்லை என்பதே இந்த உலகம் கண்ட நடைமுறை. அதனால் தான் வள்ளுவப் பெருமானும்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல – உழவு செய்கின்றவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் – அவர்கள் ஏனையோரைத் தாங்குகின்றனர் என்று வேளாண் தொழில் செய்வோரை உயர்த்திக் கூறுகிறார் வள்ளுவர். இப்படி இவ்வுலகின் ஏனையோர் அனைவரையும் தாங்குகின்ற விவசாயிகளை, துன்பம் அணுகாது தாங்குகின்ற அரசாக எனது அரசு திகழ்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக விவசாயிகள் நலன் காக்கவும், அவர்களது வாழ்க்கை வளம் பெறவும் எனது அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இந்த உண்மையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

2001ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், 30.6.2000 அன்றைய தேதியில், தவணை கடந்து, நிலுவையாக இருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, அவர்கள் பெற்ற கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டு இதற்காக 310.51 கோடி ரூபாய் அனுமதித்து நான் ஆணையிட்டேன்.

2002–2003ஆம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், அவர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற பயிர்க் கடன்களின் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து, இதற்காக 61.05 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன்.

2002–2003ஆம் ஆண்டு குறுவையில் விவசாயிகள் பெற்ற குறுகிய கால (Short Term) பயிர்க் கடன்களை, நடுத்தரக் கால (Medium Term) கடன்களாக மாற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு Tamil Nadu State Apex Co-operative Bank–ற்கு எனது அரசு 20 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியது.

மேலும், நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் பெற்ற நீண்ட காலக் கடன்கள் மீது, 31.12.2003 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, அதற்கென என்னுடைய அரசு 1.80 கோடி ரூபாய் வழங்கியது.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 2003–2004ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டித் தொகை 62 கோடி ரூபாயை என்னுடைய அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

1999ஆம் ஆண்டிற்கு முன்னர் மாற்றி அமைக்கப்பட்டு 31.3.2004 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த உறுப்பினர்களின் நடுத்தரக் கால மாற்றுக் கடன் - Medium Term Conversion Loan – மற்றும் நடுத்தரக் கால மறு மாற்றக் கடன் – Medium Conversion Rephasement Loan – ஆகிய கடன்களை, வட்டி இல்லாத் தொகுப்புக் கடனாக – Blocked Loan Account – ஆக மாற்றி என்னுடைய அரசு உத்தரவிட்டது. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட நாளிலிருந்து, இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு விவசாயிகள் அடுத்த 5 ஆண்டுகளில் கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் வகை செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக என்னுடைய அரசு 68.95 கோடி ரூபாய் வழங்கி ஆணையிட்டது.

இவ்வாறாக, கடந்த 4 ஆண்டுகளில், விவசாயிகளுக்கு கடன்களைத் தள்ளி வைப்பதற்கும், தீர்வு செய்வதற்கும், வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவும்; பல்வேறு சலுகைகளை அறிவித்து, அதற்கென மொத்தம் 524.31 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன்.

முந்தைய திமுக அரசு, 2001ஆம் ஆண்டு மார்ச் திங்களில், 7 சதவிகித வட்டி ஊக்குவிப்புத் திட்டம் – Interest Incentive Scheme – ஒன்றை அறிவித்தது. ஆனால், அவ்வாறு திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, அதற்கென நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. என்னுடைய அரசு தான், இதற்காகவும் 34.24 கோடி ரூபாயை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதித்து உத்தரவிட்டது.

மேலும், இந்தியாவிலேயே முதன்முறையாக, என்னுடைய அரசு தான் பயிர்க் கடன்கள் மீதான வட்டியை 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைத்து ஆணையிட்டது.

மேலும், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன் வசூல் செய்வதை வறட்சி ஆண்டுகளில் நிறுத்தி வைத்து அவர்களுக்கு என்னுடைய அரசு நிவாரணம் வழங்கியுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்ற போதிலும், 2004–2005ஆம் ஆண்டில், 1064 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டில், அதாவது, 2003–2004ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் அளவை விட 73 சதவிகிதம் அதிகமாகும்.

மேலும், என்னுடைய அரசு 31.3.2004 அன்று நிலுவையாக இருந்த பயிர்க் கடன் மற்றும் அதன் மீதான வட்டியை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றி அமைத்து, அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு கடனைக் கட்ட வேண்டியது இல்லை என்றும்; அடுத்த மூன்று ஆண்டுகளில் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இதன்படி, 2,598 கோடி ரூபாய் அளவில் நிலுவையில் இருந்த கடன் மற்றும் வட்டியை 5 ஆண்டு காலக் கடனாக மாற்றி அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, மாற்றி அமைக்கப்பட்ட கடனுக்கான வட்டியையும் என்னுடைய அரசு 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைத்து உத்தரவிட்டது. இதனால், இலட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர்கள் பலர் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்தனர். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுத் துன்பத்திற்கு ஆளான விவசாயிகள் வாழ்க்கை வளம் பெற்றிட வேண்டும்; அவர்களது துயரம் துடைக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எனது அரசு இவ்வளவு சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கி உள்ளது. இதற்கு மேலும் பயிர்க் கடன்கள் மீது நிவாரணம் அளிக்க வேண்டும் எனில் அதற்கு மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் ஆதரவு இருந்தால் தான் முடியும். இவ்வாறு நிவாரணம் வழங்குவதற்கு, மத்திய அரசும், நபார்டு வங்கியும் அனுமதி வழங்குவதோடு மட்டும் நில்லாமல் நிதி உதவியும் அளிக்க வேண்டும். ஏனென்றால் மாநில அரசால் மட்டுமே இதற்கான முழு பொறுப்பையும் ஏற்க இயலாது.

இதுவரை வழங்கப்பட்ட கடன் நிவாரணங்களில் பெரும்பாலானவை குறுகிய காலப் பயிர்க் கடன் பெற்ற விவசாயப் பெருமக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிடமிருந்து – Primary Co-operative Agriculture and Rural Development Bank–களிடமிருந்து நீண்ட காலக் கடன் Long Term Loan பெற்ற விவசாயப் பெருமக்களுக்கும்; தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் Primary Agriculture Co-operative Bank –களில் – நடுத்தரக் கடன் – Medium Term Loan – பெற்ற விவசாயப் பெருமக்களுக்கும்; நகரக் கூட்டுறவு வங்கிகளில் – Urban Co-operative Bank –களில், – கடன் பெற்றவர்களுக்கும் சலுகைகள் வழங்கிட நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன்.



கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய கடுமையான வறட்சியினைக் கருத்தில் கொண்டு, 31.3.2004 அன்றைய தேதியில் விவசாயிகளால் திருப்பிச் செலுத்தப்படாத நீண்ட கால கடன் பாக்கியை மாற்றி அமைக்கும் திட்டம் ஒன்றை நபார்டு வங்கி அறிவித்துள்ளது. ஆனால், நபார்டு வங்கிக்கு தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank – செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை மாற்றி அமைக்க இதுவரை நபார்டு வங்கி முன் வரவில்லை. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்று தவணை பாக்கி வைத்துள்ள விவசாயிகளுக்கும் ஏனைய கடன்தாரர்களுக்கும் நிவாரணம் அளிப்பதை மேலும் தாமதப்படுத்த முடியாது என்பதால் அவர்கள் பயன் பெறும் வகையில், "ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம்" என்னும் புதிய திட்டம் ஒன்றை – One Time Settlement Scheme–ஐ செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்படி,

★ சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக Non Performing Assets – ஆக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்து வோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி (Interest) கூடுதல் வட்டி (Interest on overdues) மற்றும் அபராத வட்டி (Penal interest) ஆகியவை முழுமை யாகத் தள்ளுபடி செய்யப்படும். இதன் மூலம் 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் 145.90 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவதற்கு வழிவகை செய்யப் படுகிறது.

★ நீண்ட காலப் பண்ணைக் கடன் - Long Term Farm Sector Loan - பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவிகிதம் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டியில் 50 சதவிகிதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இதன் மூலம், 57,430 பெரிய விவசாயிகள், 92.12 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவார்கள்.

★ இதர பண்ணைச் சாரா – Non Farm Sector - கடன்தாரர்களைப் பொறுத்த வரையில், 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான

மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003 அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி, மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இதன் மூலம் 17,990 கடன்தாரர்கள் 42.28 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை பெறுவர்.

இந்த ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் மூலம் One Time Settlement Scheme விவசாயிகள் மற்றும் இதரக் கடன்தாரர்கள் மொத்தம் 2,53,970 பேர் பயனடைவார்கள். இவர்களுக்கு 280.30 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை வழங்கி வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடன்தாரர்கள் தாம் செலுத்த வேண்டிய தொகையை ஒரே தவணையில் செலுத்தலாம்; அல்லது அதில் குறைந்த பட்சம் 25 சதவிகிதத் தொகையை 3 மாதத்திற்குள் செலுத்தி, மீதமுள்ள தொகையினை அடுத்த 6 மாதத்திற்குள் உரிய வட்டியுடன் செலுத்தலாம்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை ஓரளவு ஈடுகட்டும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு – Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank –ற்கு 15 கோடி ரூபாய் அனுமதித்து, நான் ஆணை பிறப்பித்துள்ளேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் – Primary Agriculture Co-operative Banks – விவசாயிகளுக்கு நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குகின்றன. இக்கடன்கள் கறவை மாடுகள் வாங்குதல், டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் வாங்குதல், கோழி வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், பழத் தோட்டம் அமைத்தல் போன்ற விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படுகின்றன. இக்கடன்களை, வழக்கமாக மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் கடன்தாரர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து நிலவிய வறட்சியினால், விவசாயிகளால் இந்தக் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலவில்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2004 அன்றைய தேதியில், 356.01 கோடி ரூபாய் அளவுக்கு நடுத்தரக் காலக் கடன் நிலுவையில் உள்ளது. இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழி முறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடனாக மாற்ற நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மட்டும் அல்லாது நகர்ப் புறங்களில் வாழும் நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்களும், பயன் பெறக் கூடிய வட்டி குறைப்புத் திட்டத்தையும் இந்தப் பேரவைக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னுடைய தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு, நகர கூட்டுறவு வங்கிகளில் – Urban Co-operative Bank –களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒட்டு மொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின் கீழ், நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் உள்ளிட்ட மொத்தம் 13,612 பயனாளிகள் 3.21 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்கெனவே வட்டிச் சலுகை பெற்றுள்ளனர். மேலும், நகர கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதங்கள் 1.2.2003 முதல் குறைக்கப்பட்டுள்ளன. நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள நெசவாளர்கள் மற்றும் இதரப் பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்குத் தற்போதைய குறைந்த வட்டி விகிதமே விதிக்கப்பட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். இதனைப் பரிவுடன் பரிசீலனை செய்து நடப்பு வட்டி விகிதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி விகிதத்தை மாற்றி அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டம் நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் பயன் அடைய விரும்புவோர் 3 மாத காலத்திற்குள் 25 சதவிகித கடன் நிலுவையைச் செலுத்தி, வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மீதம் உள்ள தொகையை அடுத்த ஆறு மாத காலத்திற்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் மூலம், 98,481 கடன் பெற்றவர்கள், 11.10 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகையைப் பெறுவார்கள்.

தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு சலுகைகள் கூட்டுறவு வங்கிகளில், கடன் பெற்றுள்ள விவசாய பெருமக்கள், நெசவாளர்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரின் சுமையை வெகுவாகக் குறைத்து அவர்கள் தங்களது கடன்களை எளிதில் திருப்பிச் செலுத்த உற்ற உதவியாக அமையும். அவர்களது தேவை அறிந்து, நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளை அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று கூறி அமைகிறேன்.

❖ ❖ ❖



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**'விஷு திருநாள்'** வாழ்த்துச் செய்தி

புத்தாண்டுத் திருநாளாம் 'விஷு' திருநாளை மகிழ்வோடு கொண்டாடும் மலையாள மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலையாள மக்களின் மனங்கவர்ந்த மகிழ்ச்சிப் பண்டிகை 'விஷு' வைகறையில் துயில் நீங்கி, வனப்பான விஷுக்கனி கண்டு, வாழ்விக்கும் இறைவனை வணங்கி, வாஞ்சையுடன் ஒன்று கூடி இல்லத்தார் விருந்துண்ணும் இனிய நாள் 'விஷு' நன்னாள்.

எத்திசையில் வாழ்ந்தாலும் தங்கள் பாரம்பரியச் சிறப்பை மறவாத பெருமக்கள் மலையாள மக்கள்.

இந்தப் புத்தாண்டு எல்லா நலங்களையும் மலையாளப் பெருமக்கள் வாழ்வில் மலரச் செய்யட்டும் என்று மனதார வாழ்த்தி என் இதயம் கனிந்த 'விஷு' திருநாள் வாழ்த்துகளை இன்னும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

# ஆண்டிபட்டியில்
# பல்துறை பணிவிளக்கக் கண்காட்சி

**தே**னி மாவட்டம் மலைகள் சூழ்ந்த மாவட்டமாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு சிறப்பானத் திட்டங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி தேனி மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக்கி வருகிறார்கள். ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி பல்வேறு சிறப்புகளைத் தாங்கி தமிழ்நாட்டில் முதன்மைத் தொகுதியாக சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது.

தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குடிநீர்ப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காணும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், சாலை வசதிகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அணைக் கட்டுகள், குட்டைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏராளமாக தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பொது மக்களிடையே எடுத்துரைத்து விளம்பரப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்துறைப் பணிவிளக்கக் கண்காட்சி மற்றும் தஞ்சாவூர் தென்மண்டல பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த 'சலங்கை நாதம் 2005' கலைத் திருவிழா 8.3.2005 முதல் 10.3.2005 முடிய ஆண்டிபட்டி இந்து உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியில் அரசுத் துறைகளுக்கு அரங்குகள் அமைத்துத் தரப்பட்டன.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ப்புத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம், மருத்துவத்துறை, சுகாதாரத் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வேளாண்மைப் பொறியியற் துறை, தாட்கோ, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை, கூட்டுறவுத் துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், ஆவின், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி, ஒருங்கிணைந்த




குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், கைத்தறித்துறை, வேளாண்மைத்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட பார்வையிழப்புத் தடுப்புச் சங்கம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கும் தனித்தனியே அரங்குகள் வடிவமைத்து கொடுக்கப்பட்டிருந்தன. 8.3.2005ஆம் நாள் மாலை 6 மணிக்கு நடைபெற்ற விழாவில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் கலை விழாவையும், கண்காட்சியையும் தொடங்கி வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் உரையாற்றுகையில் ''பொதுமக்கள் இங்கு அமைக்கப் பட்டுள்ள கலை நிகழ்ச்சிகளை மட்டுமல்ல, கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அரசுத்துறை அரங்குகள் வாயிலாக பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து அறிந்து

கொள்ள இயலும். தேனி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பெண்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். பெரும்பாலான சுயஉதவிக் குழுக்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன'' என்றார்.



மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. மு. செல்லமுத்து, துணைத் தலைவர் திரு. ராஜாங்கம், ஆண்டிபட்டி ஒன்றியக் குழுத் தலைவர் திரு. லோகிராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திருமதி ஜி. முத்துமீனாள், முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி. எஸ். செல்லம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர். கலைத் திருவிழாவையொட்டி ஆந்திரப்பிரதேச மாநிலக் கலைஞர்களின் பெரினி சிவதாண்டவம், ஒரிஸ்ஸா மாநிலக் கலைஞர்களின் மயூர் பஞ்ச் சாவ், பாண்டிச்சேரி மாநிலக் கலைஞர்களின் வில்லுப்பாட்டு, கேரள மாநிலக் கலைஞர்களின் கும்மட்டி, மத்தியப்பிரதேச மாநிலக் கலைஞர்களின் பண்ட்வாணி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உள்ளூர் கலைஞர்களால் நாள்தோறும் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் அரசின் திட்டங்களான சிறுசேமிப்பு, அனைவருக்கும் கல்வி இயக்கம், தொட்டில் குழந்தை திட்டம், எய்ட்ஸ் கட்டுபாடு, தரிசு நில மேம்பாடு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல் போன்றவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அனைத்து அரசுத்துறை அரங்குகளிலும், அரசுத் துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் அரசின் திட்டப்பணிகள், சாதனைகள் குறித்து விளக்கும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

9.3.2005ஆம் நாள் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. மாடசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் உரையாற்றும் போது ''அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியில் பல்வேறு அரசுத்துறை அரங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்றார். பெரியகுளம் அரசு தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் திரு. செ. அன்பு, மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திரு. எஸ். மதிவாணன் ஆகியோர் உரையாற்றினார்கள். பெரிய குளம் வருவாய் கோட்டாட்சியர் திரு. கே. புலமாடன் வரவேற்புரை ஆற்றினார். ஆண்டிபட்டி வட்டாட்சியர் திரு. ஆர். வைத்தியநாதன் நன்றி கூறினார்.



விழாவில் குஜராத் மாநிலக் கலைஞர்களின் பெடாராஸ், இராஜஸ்தான் மாநிலக் கலைஞர்களின் லங்கா மங்க்னீயர், கர்நாடக மாநிலக் கலைஞர்களின் பூதா நடனம், தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கட்டைக் கூத்து ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.




**10.3.2005**ஆம் நாள் நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகையில், "இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி பார்வையிடுவதற்கு மட்டுமல்லாமல் பயனுள்ள பல்வேறு தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது" என்றார். மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. அ. அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இணை இயக்குநர் (நலப்பணிகள்), திரு. ஆர். கருணாகரன், துணை இயக்குநர், (சுகாதாரப் பணிகள்) திரு. க. குழந்தைசாமி, முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. எஸ். செல்லம், ஆண்டிபட்டி சிறப்பு ஊராட்சித் தலைவர் திரு. எஸ்.கே.ஏ.பி. வஜ்ரவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு. து. முத்துப்பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார்.

சட்டீஸ்கர் மாநிலக் கலைஞர்களின் பந்தி நடனம், கர்நாடகக் கலைஞர்களின் பூதா நடனம், உதக மண்டலத்தைச் சேர்ந்த தோடர் வகுப்பினரின் நடனம், பாண்டிச்சேரி மாநிலக் கலைஞர்களின் மாஸ்க் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும், தமிழ்நாட்டின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கண்காட்சியில் சிறந்த அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பொதுப்பணித் துறைக்கு முதல் பரிசும், பெரியகுளம் அரசு தோட்டக் கலைக் கல்லூரிக்கு இரண்டாம் பரிசும், காவல் துறைக்கு மூன்றாம் பரிசும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப் பட்டது. மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் பொதுமக்கள் ஆர்வமுடன் திரளாகக் கலந்து கொண்டு, கலை நிகழ்ச்சி களையும், பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியையும் பார்வையிட்டனர். கண்காட்சியில் அரசுத்துறை அரங்கங்களில் அமைக்கப்பட்டிருந்த அரசின் திட்டச் செயல்பாடுகள் குறித்த விளக்கங்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என பொதுமக்கள் பாராட்டினார்கள்.

**– ச. செல்வராஜ்**

*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்*

*தேனி*

* * *

## கோக்கோ

கோக்கோ அல்லது கக்காவோ மரங்கள் சுமார் 9 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. ஒரு மரத்தில் ஆயிரக்கணக்கில் பூக்கள் மலரும். இதில் அதிசயம் என்னவென்றால், கிளைகளில் மட்டுமின்றி அடிமரத்திலும் இவை பூக்கும். ஆனால் பெரும்பாலான பூக்கள் உதிர்ந்து விடும். ஒரு மரத்தில் 20 அல்லது 30 பூக்களே காய்களாக ஆகின்றன.

காய்கள் முற்றிப் பழுத்தவுடன் அவற்றைப் பறித்து அதன் உள்ளிருக்கும் விதைகளைச் சேகரிப்பார்கள். இவ்விதைகளை நன்றாகக் கழுவி, உலர வைத்துப் பக்குவமாக வறுப்பார்கள். இப்படி வறுப்பதால் இவற்றுக்கு ஒருவித நிறமும் மணமும் உண்டாகின்றன. வறுத்த விதைகளை உடைத்துப் புடைத்து, ஓடு வேறு பருப்பு வேறாகப் பிரித்துப் பருப்பை இயந்திரம் மூலம் அரைப்பார்கள். அரைக்கும்போது சூடேறிப் பருப்பு இளகும். இதனுடன் பால், சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்து மீண்டும் அரைப்பார்கள். பிறகு இதனை அச்சுகளில் ஊற்றி சுவையான சாக்லேட் தயாரிக்கிறார்கள்.

இளகிய கோக்கோத் திரவத்தை மீண்டும் இயந்திரம் மூலம் அழுத்தும்போது கோக்கோ வெண்ணெய் என்ற கொழுப்புப் பொருளும் கிடைக்கிறது. மருந்து, வாசனைப் பொருள்கள், சோப்பு முதலியன தயாரிப்பதற்கு இதனைப் பயன்படுத்துகிறார்கள். கொழுப்பு நீக்கிய கோக்கோவைத் தூளாக்கிப் பானங்கள் செய்யவும் சுவையான உணவுப் பண்டங்களைத் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம் ஆகும். ஆண்டுதோறும் பயன்தரும் வகையில் ஆறுகளோ, நதிகளோ விருதுநகர் மாவட்டத்தில் இல்லை. சராசரி மழை அளவு சுமார் 800 மில்லி மீட்டர் மட்டுமே விருதுநகரில் பெய்கின்றது. அதுவும், குறிப்பிட்ட பருவ காலத்தில் குறிப்பிட்ட மழை அளவு பெய்யாத காரணத்தினால் விவசாயிகள் அதிக உற்பத்தியை அடைய முடிவதில்லை. மேலும், விவசாயம் செய்யும் மொத்தப் பரப்பில் 60 சதவிகிதம் மழையை நம்பி உள்ள மானாவாரி நிலங்களாகும். இம் மாவட்டத்தில் பெருவாரியாக வளம் குறைந்த கரிசல் மண் மிகுந்து காணப்படுகிறது.





இவ்வாறு உள்ள நிலையில், விவசாயிகள் அதிக பலன் பெற வேண்டுமானால், வறட்சியைத் தாங்கி, குறைந்த பாசன நீர் தேவைப்படும் பயிர்களையே . பயிரிட வேண்டியுள்ளது.

இதனை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களில் மாற்றுப் பயிராக காட்டாமணக்கு (ஜெட்ரோபா) பயிரிடும் திட்டத்தினை விவசாயப் பெருமக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைத்துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் மூலம், விவசாயப் பெருமக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த பயிற்சி முகாம்கள் நடத்தி, பெருவாரியாக நல்ல பலன் தரும் காட்டாமணக்குச் செடிகளைப் பயிரிட ஆலோசனைகள் வழங்கினார்கள். காட்டாமணக்கு விதைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யை டீசல் ஆகப் பயன்படுத்தலாம் என்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் வெம்பக்கோட்டை ஒன்றியம் எட்டக்காப்பட்டி கிராமத்தில் பயோடீசல் தயாரிக்கும் தனியார் ஆலையை நிறுவிடவும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். இதனால் காட்டாமணக்குச் செடி பயிரிடும் விவசாயிகள் காட்டாமணக்கு விதைகளை எளிதாக விற்பனை செய்து பலனைப் பெறலாம்.

காட்டாமணக்குச் செடி எல்லா மண் வகைகளிலும் வளரும் தன்மை உடையது. இதற்கு தண்ணீர் அதிகம் தேவைப் படுவதில்லை. எந்தச் சூழ்நிலையிலும் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. தரிசு நிலங்களில் பெருவாரியாகப் பயிரிடலாம். மேலும், மண் அரிப்பைத் தடுத்து மண்வளம் பேணுவதில் முதலிடம் பெறுகிறது. ஒரு தடவை நட்டால் 30 முதல் 40 ஆண்டுகள் வரை தொடர்ந்து பலன் தரும். இதன் சாகுபடிச் செலவு மிகவும் குறைவு. காட்டாமணக்கு விதையிலிருந்து 35 முதல் 45 சதவிகிதம் எண்ணெய் கிடைக்கிறது. இது உயிரி எரிபொருள் (பயோடீசல்) என அழைக்கப்படுகிறது. இதனை டீசல் இயந்திரங்களில் நேரடியாகவோ அல்லது டீசல் கலந்தோ பயன்படுத்தலாம். தற்போது இரயில் இன்ஜின்களில் இது பயன்படுத்தப்படுகிறது. இச்செடியின் எல்லா பாகங்களும் மருத்துவப் பயன் கொண்டது. சோப்பு

உற்பத்தி, வாசனை எண்ணெய், அழகு சாதனப் பொருட்கள், சிறந்த உரமான புண்ணாக்கு, சாயப் பொருட்கள், பசுந்தாழ் உரம் எனப் பலவகைப் பொருட்களாக உற்பத்தி செய்யவும் இது பயன்படுகிறது.

காட்டாமணக்குச் செடியினை நேரடியாக விதைகள் மூலம் பயிர் செய்யலாம். இறவைப் பயிருக்கு 2x2 மீட்டர் இடைவெளியும், மானாவாரிப் பயிருக்கு 1.5 x 1.5 மீட்டர் இடைவெளியும் கடைப்பிடிக்க வேண்டும். நடப்பட்ட இரண்டாவது ஆண்டில் மகசூல் கொடுக்க ஆரம்பிக்கும். சீரான வருமானம் நான்காம் ஆண்டிலிருந்து கிடைக்கும். ஏக்கருக்கு சுமார் ரூ.6,000 முதல் ரூ.8,000 வரை இலாபம் கிடைக்கும். மேலும் பழத் தோட்டங்களில் ஊடு பயிராகவும் இதனை வளர்த்துப் பயன்பெறலாம்.





இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட காட்டாமணக்குச் செடிகளை, விருதுநகர் மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் பயிரிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் எடுத்த முன்னோடி முயற்சிகள் மூலம் சென்ற பருவமழைக் காலத்தில் வேளாண்மைத்துறை மூலம் சுமார் 100 விவசாயிகள் 100 ஏக்கர் பரப்பில் பயிரிட்டுள்ளனர். மேலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மூலம் 30 நீர் வடிப்பகுதிகளில் சுமார் 50 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் செடி பயிரிடப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் 'நவப்ரா' திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பயனாளிகள் குழுக்கள் மூலமாக நர்சரி முறையில் செடிகள் உருவாக்கப்பட்டு சுமார் 40 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் செடி பயிரிடப்பட்டுள்ளது.

இதனைக் கண்டறிந்த மற்ற விவசாயிகளும் காட்டாமணக்குச் செடிகளைப் பயிரிடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். கிடைக்கும் குறைந்த மழை அளவிலும், வறட்சியைத் தாங்கி நிறைந்த பலன் கொடுக்கும் காட்டாமணக்குச் செடி, விவசாயிகளுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இதனை மாற்றுப் பயிராகப் பரிந்துரை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கும், சாகுபடி செய்வதற்கு அனைத்து உதவிகளையும் செய்துதந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், வேளாண்மைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கும் விவசாயிகள் நன்றி கூறிப் பாராட்டுகின்றனர்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
விருதுநகர்.

* * *

# எங்கள் தமிழ்

*இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்*
*கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!*
*கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்*
*கதியில் உயர்ந்திட யாம்பெற்றபேறு!*
*தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்*
*தமிழிறும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!*
*நனியுண்டு நனியுண்டு காதல் –தமிழ்*
*நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்*



# தமிழின் இனிமை

*கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்,*
*பனிமலர் ஏறிய தேனும், – காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்;*
*நனி பசு பொழியும் பாலும் – தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்,*
*இனியன என்பேன் எனினும் – தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!*



### மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
## செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
### **'யுகாதி'** வாழ்த்துச் செய்தி

**த**மிழகத்தில் வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் அனைத்து மக்களுக்கும் எனது அகம் கனிந்த 'யுகாதி' திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தமிழகம் அமைதிப் பூங்கா. மொழியால் வேறுபட்ட மக்கள் இதயத்தால் இணைந்து வாழலாம் என்பதற்கு இனிய எடுத்துக்காட்டு தமிழ்நாடு. பன்மொழி பேசும் மக்கள் ஒன்றுபட்டு வாழலாம் என்பதைப் பலநூறு ஆண்டுகளாக உணர்த்திவரும் தமிழகம் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் தத்துவத்தின் விளைநிலம் ஆகும்.

இத்தகைய விழுமிய தத்துவத்தைக் கடைபிடித்துக் காலகாலமாகத் தமிழகத்தின் அங்கமாக வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் தங்கள் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் அதே வேளையில் தமிழ் மக்களோடு தமிழ் மக்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

புத்தாண்டுத் திருநாளாம் இந்த 'யுகாதி' திருநாளில் அனைத்துத் தெலுங்கு மற்றும் கன்னட மக்களுக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

# சென்னையில் மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்க திட்டம்


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு



இந்தியாவின் முக்கியப் பெருநகரங்களில் சென்னையும் ஒன்றாகத் திகழ்கிறது. அதுமட்டும் அல்லாமல், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய மாநகரமாகவும் சென்னை மாநகரம் விளங்குகிறது. சென்னைப் பெருநகரத்தின் மொத்தப் பரப்பளவு 1,177 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் மைய நகரப் பகுதி 172 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2001–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள்தொகை 70.4 இலட்சம் ஆகும். இதில், சென்னை நகரில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கை மட்டும் 43.4 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகர் பகுதியில் 1984 ஆம் ஆண்டில் 1.4 இலட்சமாக இருந்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 2004 – ஆம் ஆண்டில் 16 இலட்சமாகப் பெருகியுள்ளது. அதாவது, வாகனங்களின் எண்ணிக்கை பத்து மடங்குக்கும் மேலாக உயர்ந்து, போக்குவரத்து நெரிசல் ஏற்படக் காரணமாக உள்ளது. சென்னையில் ஒவ்வொரு நாளும் 600 புதிய மோட்டார் வாகனங்கள் என்ற எண்ணிக்கையில் சென்னை மாநகரில் வாகனங்கள் பெருகுகின்றன. ஆனால், அந்த அளவுக்கு ஏற்ப சாலைப் பரப்பு அதிகமாகவில்லை. மாநகரின் மொத்தப் பரப்பளவில், சாலைகள் பரப்பு பாங்காக்கில் 11 விழுக்காடாகவும், லண்டன், பாரீஸ், நியூயார்க் ஆகிய வளர்ச்சியடைந்த வெளிநாட்டு நகரங்களில் 20 முதல் 25 விழுக்காடாகவும் உள்ளது. ஆனால் சென்னை மாநகரில் இது 3 முதல் 4 விழுக்காடாகத் தான் உள்ளது. இதனால் போக்குவரத்து மேலாண்மைக்கும், பொது மக்களின் பாதுகாப்பான இயக்கத்திற்கும் கடும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்தினைச் சமாளிக்க கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முதற்கட்டமாக 8.5 கிலோ மீட்டர், இரண்டாம் கட்டமாக 11.16 கிலோ மீட்டர் தூரத்துக்குமான பறக்கும் ரயில் எனப்படும் திரள் துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் (MRTS) உள்வட்டச்சாலை அமைத்தல் ஆகியவை அடங்கும். மேலும், சென்னைப் பெருநகரின் போக்குவரத்தை மேம்படுத்தி, நெரிசலைச் சீர்செய்யவும், தொடர்ந்து பெருகிவரும் மாநகரப் போக்குவரத்துத் தேவையைச் சமாளிக்கவும், முனைப்பான முதலீடுகள் செய்யப்பட வேண்டியது மிக அவசியம் ஆகும். எனவே, தற்போதுள்ள திரள் போக்குவரத்து தொடர் அமைவு வசதிகளை (Mass Transit Network) மேலும் வலுப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் நம்முடைய முக்கிய நோக்காக உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்துத் தேவையை



ஈடுகட்டுவது மட்டுமன்றி, சென்னை நகரின் நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய திரள் பயணியர் இயக்கத்தை செயலாக்க நான் முனைப்பாக உள்ளேன்.

சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விளக்க டெல்லி மெட்ரோ ரயில் கழகத்தை - Delhi Metro Rail Corporation - ஐ நான் கேட்டுக் கொண்டேன். டெல்லி மெட்ரோ – ரயில் கழகம் 21.8.2003 அன்று நிகழ்த்திய விளக்கத்திற்குப் பின், புதுடெல்லியில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வரும் மெட்ரோ ரயில் திட்டத்தினைப் போன்ற ஒரு திட்டத்தை சென்னையில் செயல்படுத்த ஓர் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையை, டெல்லி மெட்ரோ ரயில் கழகம் மூலம் தயாரித்து பெற்றிட நான் ஆணையிட்டேன். இதற்கு 54 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

டெல்லி மெட்ரோ ரயில் கழகம், அதன் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையில் மெட்ரோ ரயிலை சென்னையில் அமைக்க இயலும் என்றும், அதற்கென மூன்று வழித்தடங்களைத் தெரிவு செய்தும் பரிந்துரைத்துள்ளது. அந்த மூன்று பிரதான Corridor எனப்படும் வழிகள் பின்வருமாறு:

பிரதான வழி 1 : திருவொற்றியூரிலிருந்து அண்ணாசாலை வழியாக சென்னை விமான நிலையம் வரை – தூரம் 31.54 கிலோ மீட்டர்.

பிரதான வழி 2: சென்னைக் கடற்கரையிலிருந்து பெரியார் ஈ.வெ.ரா சாலை வழியாக கோயம்பேடு வரை – தூரம் 13.54 கிலோ மீட்டர்.

பிரதான வழி 3 : 21.68 கிலோ மீட்டர் தூரத்திலான கூடுதல் தொடர் அமைவு. திருவான்மியூர் – எல்.பி. சாலை – இராமகிருஷ்ணா மடம் சாலை – லஸ் சர்ச் சாலை – எல்டாம்ஸ் சாலை – தியாகராயா சாலை – உள்வட்டச் சாலை – அம்பத்தூர் தொழிற்பேட்டை ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் இரண்டாம் கட்டமாக 2016–ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்குதல்.

பிரதான வழிச்சாலை – 1 மற்றும் பிரதான வழிச்சாலை–2இல் மெட்ரோ ரயில் அமைப்பை 5086.85கோடி ரூபாய் செலவில் 2005 – 2010 வரை உள்ள ஆண்டுகளில் முதல் கட்டமாக மேற்கொள்ளலாம் என டெல்லி மெட்ரோ ரயில் கழகம் பரிந்துரைத்துள்ளது.

பிரதான வழிச்சாலை – 1இல் சுமார் 8.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் அமைப்பு தரைக்கடியில் சுரங்கப்பாதையாக அமையும். மீதமுள்ள தூரத்திற்கு இது சாலையின் மத்தியில் தரை மட்டத்திற்கு மேலே மேல் அடுக்கில் அமைக்கப்படும்.


பிரதான வழிச்சாலை 1 மற்றும் 2இல் அமைக்கப்படும் மெட்ரோ ரயில் மூலமாக ஒரு நாளைக்கு சுமார் 10.56 இலட்சம் பயணிகள் பயணம் செய்ய இயலும். இதனால், பொது போக்குவரத்து வசதிகள் – அதாவது, ரயில் மற்றும் பேருந்துகள் மூலம் பயணம் செய்வோர் எண்ணிக்கை வீதம் தற்போதைய 43 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயரும். இதன் பயனாக பயணிகளுக்கு நேரமும் செலவும் மிச்சப்படுவதோடு பயண வசதிகளும் வெகுவாக அதிகரிக்கும்.

இந்த விரிவான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கையினை - Detailed Project Report - தயாரித்திட நான் அறிவுறுத்தியுள்ளேன். இது டெல்லி மெட்ரோ ரயில் கழகத்தால் ஆறு மாத காலத்திற்குள் தயாரிக்கப்படும். இதற்கான செலவு 3.30 கோடி ரூபாய் ஆக இருக்கும். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின், இந்தப் பணியினை மேற்கொள்ள பொருத்தமான நிறுவனத்தை நிர்ணயிக்கவும் இந்தப் பணியினைச் செயல்படுத்தத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

# கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரையண்ட் பூங்கா

**கொ**டைக்கானலில் உள்ள "பிரையண்ட் பூங்கா" சுற்றுலாப் பயணிகளின் மனம் கவரும் இடமாகவும், கண்டு மகிழ ஏற்ற சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.



கடல் மட்டத்திலிருந்து கொடைக்கானல் நகரம் 2,133 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 24.45 சதுர கிலோமீட்டர் ஆகும். சுமார் 102 ஆண்டுகளுக்கு முன் வனத்துறை அதிகாரியாக இருந்த "பிரையண்ட்" என்ற ஆங்கிலேயரால் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட இந்தத் தோட்டம் அவரது பெயரிலேயே "பிரையண்ட் பூங்கா"வாக அமைந்தது.


இப்பூங்காவில் வளர்க்கப்படுகின்ற 700க்கும் மேற்பட்ட ரோஜா மலர்கள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்க்கின்றன. நாட்டில் கிடைக்காத சுமார் 80 வகையான செடிகள், கண்ணாடி அறையில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சீதோஷ்ண நிலைக்கேற்ப குறிப்பிட்ட காலத்தில் மலர்கின்ற 35 வகையான செடிகள் மற்றும் ஆண்டு தோறும் பூக்கும் 50 வகையான செடிகள் இப்பூங்காவை அழகு செய்கின்றன.

பிரையண்ட் பூங்காவில் பல்வேறு பூக்களுடன் சிங்கமுக பூக்கள், கோழிக்கொண்டைப் பூ, டோலக் பூ உள்பட பல பூக்கள் பூத்துள்ளன.

கொடைக்கானலுக்கு வரும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளில் அதிக எண்ணிக்கையில் பிரையண்ட் பூங்காவை கண்டு மகிழ்ந்து செல்கின்றனர். ✶

- முதல் திரைப்பட ஒளிப்பதிவுக் கருவி 14.4.1984ல் கண்டுபிடிக்கப்பட்டது.
- வீடியோ ஒளிப்பதிவுக் கருவி 1956ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- அமிர்தா தொலைக்காட்சி 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- அமிர்தா தொலைக்காட்சியின் வாசகம் "விழிப்புணர்வின் உற்சாகம்".
- பைபிளுக்கு அடுத்து அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் "பஞ்சதந்திரா".



# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த சென்னை, மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 7 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த மதுரை, இராமநாதபுரம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

சென்னையைச் சேர்ந்த திரு. ஆர். கோவிந்தராஜ், திரு. எம். நடராஜன், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆர். இராமலிங்கம், திரு. எஸ்.ஏ. கருப்பண்ணன், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். முத்து சவுடய்யா, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ்.கே. இருளப்பன், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. டி.ஆர். கிருஷ்ணசாமி ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள் தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

### விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. கே.எம். தனலட்சுமி, திருமதி. பி.வி. பார்வதி அம்மாள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. இராமு அம்மாள், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. பார்வதி அம்மாள் ஆகியோர் மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்கள் எனவும், தங்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களை, பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்காணும் நான்கு பேர்களுக்கும் மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும் ஆக மொத்தம், 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகள், அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் அம்மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்படும். ★


விழாக்காலம் – கோ-ஆப்டெக்ஸ் காலம்
கோ-ஆப்டெக்ஸ்
காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
• காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
• சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
• ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
• கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
• உறையூர் பருத்தி சேலைகள்
• சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
• மதுரை சுங்கடி புடவைகள்
• சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
• கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
• குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
• தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at www.tn.gov.in / www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள். முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

